விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 14 ஞாயிற்றுக்கிழமை (27.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 160



ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO


# நவநீதம் பிள்ளையின் வருகைக்கு இலங்கை அனுமதிக்க வேண்டும்



## அமெரிக்கா கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதிக்க வேண்டும் என அமெரிக்கா கோரியுள்ளது. அத்துடன் இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையுடன் மிகவும் நெருக்கமாகச் செயற்பட வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நில அதிர்வு

(கொழும்பு)

கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் நேற்றிரவு 10 மணியளவில் அதிர்வொன்று உணரப்பட்டது.

நுவரெலியா, ஹட்டன், பதியபெலல்ல உள்ளிட்ட பகுதிகளில் இது நன்றாக உணரப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் உறுதி செய்தது.

இந்த நில அதிர்வு இலங்கைக்குள் மாத்திரம் உணரப்பட்டதொன்றாகவே உறுதி செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் இடம்பெற்ற பூமிஅதிர்ச்சியின் காரணமாக இது ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடக பிரிவு தெரிவித்தது. (எ-11)

## வல்லையில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(கரவெட்டி)

பருத்தித்துறை வீதி வல்லை வெளிப்பகுதியில் விபத்துக்குள்ளான நிலையில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று இரவு 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீதியில் மோட்டார் சைக்கிளும், குறித்த இளைஞனின் சடலம் 50 மீற்றர் தொலைவில் உள்ளவாய்க்காலில் இருந்தும் மீட்கப்பட்டுள்ளது.

கரவெட்டி (20ஆம் பக்கம் பார்க்க)


## தமிழரசுக் கட்சித் தலைவராக சம்பந்தன் மீண்டும் தெரிவு!

(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெறும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடு இன்று மட்டக்களப்பில் நடைபெறவுள்ள நிலையில் கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

பொதுச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவானார். நிர்வாகச் செயலாளராக குலநாயகம், பொருளாளராக எஸ்.ரி.ஆர்.தியாகராஜா, சிரேஷ்ட (20ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கை குறித்து ஆராய 3 நாடுகள் கொண்ட குழு

### ஐ.நா. நியமித்தது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையாளர் காரியாலயத்தின் ஊடாக இலங்கை தொடர்பாக ஆராய்வதற்காக 3 நாடுகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணையகத்தின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவலின் அடிப்படையில் எதிர்வரும் ஒக்டோபர் 22ஆம் திகதியிலிருந்து நவம்பர் 5ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள ஆய்வுக் குழு கூட்டங்களின் போது இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக ஆராய்வதற்கு இந்தியா, ஆபிரிக்காவின் பெனின் ராஜ்ஜியம் மற்றும் ஸ்பெயின் (20ஆம் பக்கம் பார்க்க)

## நீதிக்குப் புறம்பான படுகொலைகள் இலங்கையில் இடம்பெறவில்லை

### கிலாரியின் அறிக்கைக்கு இலங்கை பதில்

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட உலக மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அத்துடன் தமது படைத்தரப்பினரின் நற்பெயரைக் கெடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் இன்னொரு முயற்சி இது என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கிலாரி கிளின்டன் (20ஆம் பக்கம் பார்க்க)


13% 12 மாதம்

12.5% 03 மாதம் வ.வ.வீ. 13.10%

மிகச்சிறந்த வங்கியிலிருந்து மிகச்சிறந்த வட்டி

அண்மையிலுள்ள வங்கிக்கிளையை நாடுங்கள் அல்லது தகவல் நிலையத்தை தொடர்புகொள்ளுங்கள்: 011-2353353

நிலையான வைப்புக்கள் COMMERCIAL BANK

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

# மூட நம்பிக்கையுடையவர்களின் தலைமைத்துவம் கொண்டது இலங்கை

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய நூதனசாலையிலிருந்து புராதன வாள்கள் காணாமல்போன சம்பவமானது, புராணக் கதைகளையும் மூடநம்பிக்கைகளையும் நம்பும் தலைமைத்துவத்தை நாடு கொண்டுள்ளதன் விளைவாகும் என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் கூறினார்.

துட்டகைமுனுவின் வாளை வைத்திருப்பவர் ஆயுள் முழுவதும் ஆட்சி செய்ய முடியும் என புராதன நம்பிக்கை உள்ளது.

இத்தகைய நம்பிக்கைகள்தான் நூதன சாலையில் இருந்து புரதான வாள்களும் மோதிரங்களும் மர்மமாக காணாமல் போவதற்கு வித்திட்டதாகத் தோன்றுகின்றது. மக்களைவிட சோதிட சக்தியை நம்பும் அரசியல் தலைமை உள்ளபோது இவ்வாறு நேரிடுகிறது. அவர்கள் தேடும் வாளை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏனைய பொருட்களை யாவது நூதனசாலையிடம் ஒப்படைக்குமாறு நாம் கோருகிறோம் என அநுரகுமார திசாநாயக்க கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் இதேபோன்ற குற்றச்சாட்டை முன்வைத்தது. எனினும் ஐ.தே. க. ஆட்சிக் காலத்தில் மன்னர் ஒருவர் பயன்படுத்திய புராதன சிங்காசனமும் மன்னர் ஒருவரின் முடியும் காணாமல் போனதாக கலாசார அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க கூறினார்.

இப்போது நீங்கள் வாள் காணாமல் போனமை குறித்து பேசுகிறீர்கள். ஆனால் சிங்காசனம் காணாமல்போன அரசியல் வரலாற்றை நாம் கொண்டுள்ளோம் என்றார். (எ-11)

# புலிகள் பற்றிய தகவல்களை அரசுசாரா நிறுவனங்களே வழங்கின

## கொழும்பு ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு தகவல்களை வழங்கியுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

14 பக்கங்களை கொண்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள மனித உரிமை அறிக்கையில், புலிகள் இரகசியமான இடங்களில் வைத்து கொல்லப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் கொல்லப்பட்ட புலி உறுப்பினர்கள் பற்றிய தகவல்களை இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கத் தவறியுள்ளதாக அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அறிக்கையில் வெள்ளைக் கொடி சம்பவம் பற்றியும் குறிப்பிட்டப்பட்டுள்ளது. பொலிஸார் கப்பம் பெற்றுக் கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களே இந்தத் தகல்களை வழங்கியுள்ளன என சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (எ-11)

# நல்லூர் மஹோற்சவ ஏற்பாட்டு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி கோவில் வருடாநத மஹோற்சவம் எதிர்வரும் யூலை 24-ம் திகதியிலிருந்து ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு, முதல்வர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (எ)

## வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராக

# ஆளும் கட்சி தொழிற்சங்கங்கள் பாரிய போராட்டம் நடத்த திட்டம்

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு ஆதரவான 25 தொழிற் சங்கங்கள் பாரியளவில் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளன.

வாழக்கைச் செலவு அதிகரிப்பு, ஆள் கடத்தல், ஜனநாயகத்தை நிலைநாட்டல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தை வலியுறுத்தும் நோக்கில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்து. உழைக்கும் மக்கள் சக்தி என்ற பெயரில் இந்த தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்துள்ளன.

அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சங்கம், இலங்கை புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி சங்கம், திணைக்கள மற்றும் பொது தொழிலாளர் சங்கம், சுய தொழில்களில் ஈடுபடுவோர் சங்கம், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தேசிய கல்வி ஜன நாயக ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட அரசாங்கத்திற்கு ஆதரவான 25 தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து இந்த போராட்டத்தை நடத்த உள்ளன.

அரசாங்கத்தை நல்வழிப்படுத்தவும், அரசாங்கத்திற்கு எதிரான சக்திகளை தோற்கடிக்கவும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக குறித்த தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. (எ-11)

# ஐ.தே.கவின் தெரிவுக்குழு

தேசிய பிரச்சினை தீர்வுக்கான நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு பரிந்துரைக்கப் படும் ஐக்கிய தேசியக் க்ட்சியின் உறுப்பினர்களின் பெயர்பட்டியலை எதிர்வரும் மத்திய செயற்குழுவத்தில்சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த பெயர்பட்டியலுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கட்சியின் தவிசாளர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசின் நிலைப்பாட்டுக்கு அமைய நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு முழுமையான ஆதரவை வழங்க ஐ.தே.கட்சி அண்மையில் தமது இணக்கப்பாட்டை வெளியிட்டது. இதன்படி தற்போது நியூசிலாந்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பாக இறுதி தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

அதன் பின்னர், நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பெயர்கள் மத்திய செயற்குழுவுக்கு சமர்பிக் கப்படவுள்ளதாக கட்சியின் தவிசாளர் குறிப்பிட்டார். (எ-11)

# இலங்கை மீனவர்கள் ஐவர் இந்திய கடற்பரப்பில் கைது

இந்திய கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்த மேலும் ஐந்து இலங்கை மீனவர்களை அந்த நாட்டின் கரையோர பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்

ஆந்திர மாநிலத்திற்குரிய கடற்பரப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இலங்கை மீனவர்கள் பயணித்த படகு மற்றும் அதிலிருந்த மீன் ஆகியவற்றையும் இந்திய கரையோரப் பதுகாப்பு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஆந்திராவிலுள்ள நீதிமன்றமொன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



சிவா, விமல், அஞ்சலி, ஓவியா, சந்தானம் மற்றும் பலர் நடிப்பில் சுந்தர் C இன்

கலகலப்பு

மசாலா கபே

இலங்கை இந்திய ஒரே வெளியீடு

10.30, 2.30, 6.30

D.T.S


# நிதி மோசடிக் குற்றச்சாட்டு சந்தேக நபருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

லண்டன் அனுப்புவதாகக் கூறி பண மோசடி செய்த குற்றச்சாட்டில் கைதான விநாயகர் வீதி யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

குறைந்த செலவில் அதிக பலன் எனக் கூறி மட்டுவில் கிழக்கு சாவகச்சேரியினைச் சேர்ந்த நபரொருவரினை ஏமாற்றி 5 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயினை பெற்றுக் கொண்டு தலைமறைவாகியுள்ளார் மோசடிக்காரர்.

ஏமாந்தவர் யாழ். பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தததனைத் தொடர்ந்து குறித்த ஏமாற்றுக்காரரினை யாழ்.விசேட குற்றத் தடுப்பு பொலிஸார் கைது செய்து யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த வழக்கு மீண்டும் யாழ்.நீதிவான் மா.கணேசராசா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப் பட்டது.

வழக்கினை விசாரணை செய்த நீதிவான் கந்தர்மடத்தில் முகவர் நிலையம் ஒன்றினை நடத்தி வந்த குறித்த நபரினை இரண்டரை லட்சம் ரூபாய் பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல அனுமதித் தார். (எ-4)

# விக்கிரகங்கள் திருட்டு

(சாவகச்சேரி)

வேம்பிராய் கலட்டிப் பிள்ளையார் கோவில் விக்கிரகங்கள் இரண்டு களவாடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி வேம்பிராய் கலட்டிப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் பூசை இடம்பெற்றபோது விக்கிரகங்கள் இருந்துள்ளன.

மாலை 5 மணிக்கு பூசைக்காக கோவிலுக்கு சென்று பார்த்தபோது கதவு உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

ஐம் பொன்னிலான பிள்ளையார் சிலையும், சண்டேஸ்வரர் சிலையும் களவாடப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

# முன்னேஸ்வரத்தில் சந்திரவட்டக்கல்

சிலாபம் முன்னேஸ்வரம் ஆலயத்தின் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கையின்போது சந்திரவட்டகல்லின் பகுதியொன்று மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்திற்கான கோபுரம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக குறித்த அகழ்வு நேற்று மாலை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், சந்திர வட்டக்கல்லின் பகுதியொன்று தோன்றியதை அடுத்து அகழ்வு நடவடிக்கை நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக புராதன தொல்பொருள் ஆய்வு நிபுணர் எல்லாவல மேதானந்த தேரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸாருக்கு தாம் அறிவித்துள்ளதாகவும், இங்கு சந்திரவட்டக்கல் தோன்றியிருப்பது புராதன காலத்தில் அது பௌத்த விகாரை இருந்த பிரதேசமாக கருத முடியும் எனவும் குறிப்பிட்டார்.

சிலாபம் பிரதேசத்தில் பௌத்த மதத்திற்கு உரித்தான பல அம்சங்கள் இருந்ததாகவும், அவை இலங்கையை ஆட்சிசெய்த மேலைத் தேயவர்களால் அழிக்கப்பட்டதாகவும் மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார். (எ-11)


## சேவை முகவர்

காணிகள், வீடுகள், விற்பனைக்கு

மணல்தறை லேன், பழம் றோட், பலாலி வீதி, கச்சேரி 5 பரப்பு, A-9 நுணாவில் தென்னந் தோட்டம் 21பரப்பு, கோப்பாய் ஆகிய இடங்களில், யாழ்., நல்லூர், கொக்குவில், கோண்டாவிலில் விற்க விரும்புவோர்; தொடர்பு சுந்தரம்:0774819801

(8485)


# இந்தியத் தூதுவர் மட்டு.க்கு விஜயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சமூகப் பிரதிநிதிகளுடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளார். அங்கு அவர் மட்டக்களப்பு- திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையிலான சமயங்களின் சமாதானத்துக்கான ஒன்றியத்தின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசியுள்ளார்.

மட்டக்களப்பு மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவர் அவர்களிடம் பேசியுள்ளார்.

நீண்டகாலமாக விசாரணைக்காகக் காத்திருக்கும் கைதிகளின் விவகாரம், காணிப் பிரச்சினை, முஸ்லிம்களின் மத வழிபாட்டிடங்கள் தாக்கப்படுவது குறித்த விவகாரம் ஆகியவை பற்றி பொதுமக்கள் பிரதிநிதிகள் அவரிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை அமுல்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து தாம் இந்தியத் தூதுவரிடம் வலியுறுத்தியதாக ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை தெரிவித்தார்.

அதேவேளை சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் குறித்து, தாம் அவரிடம் வலியுறுத்தியதாகவும் ஆயர் குறிப்பிட்டார். (எ-11)


## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr. P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205, 0214922403

மீண்டும் யாழில்

28.05.2012 முதல் 03.06.2012 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன் (பழைய கமால் லொஜ்)

392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)

(C-090)

## சித்திரைப்புத்தாண்டு விளையாட்டு விழா

(சிவநகர்)

வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் நற்பணி மன்றம் தமிழ் சிங்கள புத்தாண்டுக்கான விளையாட்டுக் கொண்டாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சங்கத்தின் தலைவர் ஹடிசன்சில்வா , துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர்.பேமசிறி,வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.ஏ.எஸ்.வீரசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டிகளில் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் தொழில் புரிபவர்களின் குடும்பத்தவர்கள் மாத்திரமே கலந்து கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-9-254)

## வயாவிளான் பாடசாலைக்கு செல்வதற்கு பேருந்து வசதி

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் பாடசாலைக்கு நீண்ட நாட்களாக நீண்டதூரம் நடந்து சென்ற மாணவர்களுக்கு விமோசனம் கிடைத்துள்ளது.

மேற்படி பாடசாலை மாணவர்கள் நீண்ட தூரம் நடந்து செல்வது குறித்து அறிவிக்கப்பட்டதை அடுத்து இப்பாடசாலைக்கு காலையிலும் பாடசாலை முடிவுறும் நேரத்திலும் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த அரச மற்றும் தனியார் பேருந்துகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

கடந்த வாரம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்படி மாணவர்கள் பாடசாலைக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளதன் பிரச்சினை சுட்டிக்காட்டப்பட்டதனையடுத்தே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வயாவிளான் பாடசாலைக்கு அண்மித்த இடங்களில் பயணிகள் குறைவாக காணப்படுவதனால் அப்பகுதியினூடாக சேவையில் ஈடுபடும் பேருந்துகள் மாற்றுவழிப் பாதையினூடாக சேவையில் ஈடுபட்டு வந்துள்ளன.

இதனால் குறித்த பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்திற்கு மேல் நடந்தே பாடசாலைக்கு செல்ல வேண்டியிருந்தது.

இப்பிரச்சினை தொடர்பாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதன் பின் குறித்த பாடசாலைக்கு மாணவர்களை காலையிலும் பாடசாலை முடிவுறும் நேரத்திலும் ஏற்றி இறக்க இரு அரச போக்குவரத்து பேருந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதோடு 16 தனியார் பேருந்துகளும் இதற்கான சம்மதத்தைத் தெரிவித்துள்ளன.

(அ-4)

## தீவகக் கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்திலுள்ள யா/சரவணை சின்னமடு றோ.க.த.பாடசாலை வகை-III பாடசாலையின் அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இவ் வெற்றிடத்திற்கு தீவக கல்வி வலயத்தில் கடமையாற்றும் அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுகின்றன.

இதற்கு அதிபர் தரத்தினை சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களின் வகுப்பு-I, வகுப்பு-2-I விண்ணப்பங்கள் பரிசீலணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விண்ணப்ப படிவங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேலணை வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

(அ-7)

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச்.சங்கம் நடத்தும் 15 ஆவது ஆண்டு மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் மாலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை மின்னொளியில் நடைபெற்று வருவதாக செயலாளர் க.ஜினதாஸ் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழகமும் இரவு 7 மணிக்கு கைதடி சித்தி விநாயகர் விளையாட்டுக் கழத்தை எதிர்த்து உடுவில் ஆலடி சுப்பர் கிங் விளையாட்டுக் கழக(பி) அணியும் விளையாடவுள்ளது.

(அ-9)

## இராசி பலன்

27.05.2012

(வைகாசி 14, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு

சஷ்டி முற்பகல் 10.44 மணிவரை

ஆயிலியம் முன்னிரவு 9.07 மணிவரை

இராகுகாலம் 4.22-5.52 மணிவரை

சுபநேரம் 8.52-10.22 மணிவரை

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பெற்றோர் ஆதரவால் பெருமை காண்பீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், போக்குவரத்தால் அலைச்சல் ஏற்பட்டாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள்.

**இடபம்** நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து உதவுவீர்கள், குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி காணும் நாள்.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், புதிய நட்பால் பொருளாதார நிலை உயர்வடையும்.

**கடகம்** போசன சுகமுண்டு,தொழில் முன்னேற்றம் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை பெறுவீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும், வழிபாட்டால் இன்பம் காண்பீர்கள்.

**சிங்கம்** வியாபாரம், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், மாலை நேரம் ஆசைப்பட்ட பொருளை வாங்கி மகிழ்வீர்கள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம்.

**கன்னி** எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், திடீர் பணவரவு மனச்சந்தோசத்தைக் கொடுக்கும், உங்கள் செல்வாக்கு மேலோங்கும், போசன சுகமுண்டு.

**துலாம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத பணவரவுகள் கிடைக்கலாம், முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**விருச்சிகம்** கனிவான செய்திகள் வந்து சேரலாம்,எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறலாம், சிலருக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டிவரலாம், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம், ஆரோக்கியக்குறைவான நாள்.

**மகரம்** எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், தொழில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்** ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும்,புதிய பொருட் சேர்க்கையுண்டு, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் செய்து முடிப்பீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

வளவன்

## வாரம் ஒரு தகவல்

### பாடும் பறவைகள்

“கையிலே என்ன வைத்திருக்கிறீர்கள்?”

“பஞ்சவர்ணக்கிளி சேர்... வாங்கிக் கொண்டு போகிறேன்... வளர்ப்பதற்காக...!”

“கிளி வளர்ப்பதிலே ஒரு ஆர்வமா உங்களுக்கு?”

“பொதுவாக பறவைகள்... என்றாலே எனக்கு அதிக விருப்பம்!”

“அப்படியா?”

“ஆமாம்... உங்களுக்குத் தெரியுமா... பறவைகள் பாடும்! அது இசைத் தட்டாகக் கூட வெளிவந்துள்ளது...!”

“எங்கே...?”

“ஹங்கேரியிலே ஒரு பறவையியல் நிபுணர்... அவர் முப்பது வருடங்களாக சேகரித்த பல்வேறு பறவைகளின் குரல்களை- பாடல்களை- பதிவு செய்து இசைத்தட்டாக வெளியிட்டிருக்கின்றார். 1987 ஆம் ஆண்டிலே இந்த இசைத்தட்டு வெளிவந்துள்ளது”

“ஆச்சரியமாகவுள்ளதே...!”

“பறவைகளின் குரல்களையும் பாடல்களையும் அவர் ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கின்றார்... மனிதர்களினைப் போலவே பறவைகளும் தங்கள் இயல்பான குரலிலேயிருந்து பல மடங்கு உச்சஸ்தாயிக் குரலிலேயும்... ஏற்ற இறக்கத்துடனும் பாடுகின்றன...! 2 ஆயிரத்து 500 விதவிதமான பறவைகளின் குரலையும் பாடலையும் அவர் பதிவு செய்து பாதுகாத்து வைத்துள்ளார்!”

“இவைகளையெல்லாம் கேள்விப்படுகின்ற பொழுது எனக்கும் கூட பாடத்தான் தோன்றுகிறது!”

“கவலைப்படாதீர்கள்... கற்றுத் தருகின்றேன்...!”

“அப்படியென்றால்... உங்களுக்கும்...?”

“ஆமாம்... ஏற்கனவே எனக்கும் ஓரளவிற்கு சங்கீத ஞானம் உண்டு... வீணை வாசிப்பேன்... அது தெரியுமா உங்களுக்கு?”

“ஆமாம். இந்த நிமிடமே கூட உங்களுக்கு முன்னால் என்னால் வீணை வாசித்துக் காட்ட முடியும்!”

“எப்படி முடியும்?”

“ஒரு காகிதத்திலே ‘வீணை’ என்று எழுதிக் கொடுங்கள்... அதனை வாசித்துக் காட்டுகின்றேன்!”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 100 | 90 | 50 |
| உருளைக்கிழங்கு | 65 | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 60 | 80 |
| தக்காளி | 120 | 170 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 35-40 | 30 | 40 | 30 |
| கோவா | -- | 60 | 60 | 70 |
| கரட் | 60 | 70 | 50 | 120 |
| பூசணி | 35 | 20 | 20 | 40 |
| புடோல் | 70 | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 25-30 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-80 | 90-100 | 75 | 70-120 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 90 | 100 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 | 80 |
| பயற்றங்காய் | 130-180 | 100 | 80 | 60 |
| லீக்ஸ் | 120 | 160 | 100 | 170 |
| பீற்றூட் | -- | 80 | 60 | 120 |
| கறிமிளகாய் | 70 | 100 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 200 | 200 | 120 |
| போஞ்சி | -- | 120 | 130 | 140 |
| கத்தரிதம்புள்ள | 70 | 70 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 130 | 80 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 20 | 16-20 |

# ஜனாதிபதி கொடுத்த சுதந்திரத்தை

# சரத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது

## அமைச்சர் ஹெகலிய ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதியின் மன்னிப்பில் விடுதலையாகிய சரத் பொன்சேகா வடபகுதியின் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினர் தலையிடுவதாக பத்திரிகையொன்றுக்கு கூறியிருக்கின்றார்.

மேற்படி கருத்தானது வெளிநாடுகளின் தலையீடுகளை அவர் வலியுறுத்துவதை காட்டுவதாக ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, பதில் அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் செய்தி நிருபர்களை சந்தித்து நேற்று முன்தினம் உரையாடினார்கள்.

சரத்பொன்சேகா பற்றி ஊடகவியலளார்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல,

ஜனாதிபதி அளித்த மன்னிப்பின் மூலம் சுதந்திரமாக வெளியில் நடமாடிக்கொண்டிருக்கும் சரத் பொன்சேகா தன்னுடைய உண்மை நிலைப்பாட்டை மறந்து விட்டு ஜனாதிபதி அளித்த சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்ய முயற்சி செய்கிறார் என்றும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் பிரச்சினைகளுக்கு தீர்வை ஏற்படுத்துவதற்கு சரத் பொன்சேகா வெளிநாட்டில் உள்ளவர்களை தலையிடுமாறு அழைத்தது தவறான செயல் என்றும் இப்போது அவர் இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் கைப்பாவையாக மாறிவிட்டாரோ என்ற சந்தேகம் எம்மத்தியில் எழுந்துள்ளது என்றும் கூறினார்.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கைக்கு எதிராக எடுக்கப்பட்ட முடிவு ஒரு தோல்வி அல்ல என்றும் இராஜதந்திர மட்டத்தில் இவ்விதம் தோல்விகள் வெற்றிகள் மாறி மாறி வரும் என்றும் சொன்னார்.

ஜெனீவா தீர்மானம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நான் அதற்கு ஏற்புடைய ஒரு நல்ல முடிவை எடுப்பேன் என்று தெரிவித்திருக்கும் கருத்தை அமைச்சரவையில் உள்ள சகல அங்கத்தவர்களும் இந்நாட்டு மக்களும் நம்புகின்றார்கள்.

ஜனாதிபதியின் கருணையினால் இன்று சுதந்திரம் பெற்றிருக்கும் சரத் பொன்சேகா இலங்கையில் இடம்பெற்ற யுத்தக்குற்றச் செயல்கள் குறித்து சர்வதேச நீதிமன்றத்தில் விசாரனை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருக்கும் கருத்து பற்றி தான் அபிப்பிராயம் தெரிவிப்பதாயின் இலங்கையில் பேச்சு சுதந்திரம் இருக்கின்றது. எவருக்கும் எதையும் பொறுப்பற்ற முறையில் சொல்லலாம்.

ஆனால் இன்று சாதாரண மனிதனாக இருக்கும் சரத் பொன்சேகா சொல்வதை எவரும் பொருட்படுத்தமாட்டார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலிநகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு,நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், கோண்டாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளப்பிட்டிப்பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி நாச்சிமார் கோவிலடி, உரும்பிராய் மேற்குப் பிரதேசம்,மருதனார்மட பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய பகுதிகளிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)


## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
30 . 01 . 1931



விண்ணில்
25 . 05 . 2004

### அமரர் ஆறுமுகம் கனகம்மா

திதி:-சஷ்டி 27.05.2012

பத்து மாதம் சுமந்து எம்மைப் பாசத்துடன் வளர்த்தெடுத்து
பாரினிலே சீருடன் நாம் வாழ நல்வழிகள் காட்டி விட்டு
இப் புவிதனில் விட்டேகி இரு நான்கு ஆண்டுகள் ஆனது அம்மா
எத்தனை யுகம் போனாலும் எம் உயிருள்ள வரையும்
எம் மனதில்நினைவாக நீயிருப்பாய் அம்மா
நிலையான உன் நினைவும் பாசமும்
நீக்கமற நினைந்திருக்கும் அம்மா
இந் நாளில் உங்களது ஆத்மா சாந்தி பெற
இறைவனை நாம் வேண்டுகிறோம் அம்மா

ஜெயபதி
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

(சி-086)

பிரிவால் துயருறும்
ஜெயபதி குடும்பத்தினர்.


# காணாமல்போன மாணவன்

# நேற்றுக்காலை வீடு திரும்பியுள்ளான்

## கடத்தல் அல்ல என்கின்றனர் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப்பகுதியில் காணாமல் போயிருந்த பாடசாலை மாணவன் நேற்று வீடு திரும்பியுள்ளான்.

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் தரம் 9 இல் கல்வி கற்றுவரும் பி. அக்ஷய் (வயது-14) என்ற மாணவனே நேற்று முன்தினம் பிற்பகல் காணாமல் போயிருந்தான்.

பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவன் வீடு வந்து சேரா்ததையடுத்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் காணாமல்போன மாணவன் நேற்றுக்காலை வீடு வந்து சேர்ந்துள்ளான் என பெற்றோரால் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

மாணவன் அக்ஷய் காணாமல் போன சம்பவம் தொடர்பாக யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவிக்கையில்,

மாணவனை யாரும் கடத்தவில்லை. கிளிநொச்சிக்கு சென்று வீடு திரும்பியுள்ளான்.

பெற்றோரினால் கொடுக்கப்பட்ட மூவாயிரம் ரூபா பணமும் அவனிடமிருந்த 300 ரூபா பணத்துடனும் கிளிநொச்சிக்கு குறித்த மாணவன் சென்றுள்ளான்.

மாணவன் காணாமல் போன சம்பவம் அறிந்ததும் பொலிஸார் தீவிர தேடுதலில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை தன்னை வாகனத்தில் யாரோ கடத்திச் சென்றதாகவும் பின்பு கொண்டு வந்து விட்டு சென்றதாகவும் மாணவன் கூறியுள்ளான்.

இருப்பினும் அதில் எந்தவித உண்மையும் இல்லை என பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (அ-6)



புலோலி கிழக்கு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய மஹோற்சவ நாட்களில் சமய கிரியைகள் மேற்கொண்ட ஆலய பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ உ. விக்கினேஸ்வரக்குருக்களும் பரிபாலன சபை செயலாளர் இ. கிருபாகரசூரியன் பொன்னாடை போர்த்தி குருவணக்கம் செய்வதைப் படத்தில் காணலாம்.

## நிதி முகாமைத்துவ பயிற்சி நெறி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்வாதார உதவித் திட்டத்தை வழங்கி வரும் சுவிஸ் உதவி தொழிலாளர் (SAH) நிறுவனமானது தாம் உதவிக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள மாதர் சங்கங்களுக்கு திறன்விருத்தியை மேற்கொள்ளும் பொருட்டு நிதி முகாமைத்துவமும் ஆவணப்படுத்தலுக்குமான பயிற்சி நெறி பனிக்கன்குளம், மாங்குளம், கற்குவாரி, கனேசபுரம், காதலியர் சமலன் குளம், ஒதியமலை, பெரியகுளம் ஆகிய பகுதிகளில் வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி பயிற்சிகள் பனிக்கன்குள மாதர் சங்கத்திற்கு கடந்த 19 ஆம் திகதியும் கற்குவாரி மாதர்சங்கத் திற்கு 20 ஆம் திகதியும் ஒதியமலை பெரியகுளம் கிராம மாதர் சங்கத்திற்கு 23 ஆம் திகதியும் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து மற்றைய மூன்று மாதர் சங்கங்களுக்கும் ஆன பயிற்சி நடைபெறவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7-261)

## தெஹிவளை மசூதியை அகற்றக்கோரி பிக்குகள் தலைமையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பின் புறநகர்ப் பகுதியான தெஹிவளையிலுள்ள முஸ்லிம்களின் மசூதி ஒன்றை அங்கிருந்து அகற்றுமாறு கோரி அதன் மீது தாக்குதலை நடத்துவதற்கு பிக்குகள் தலைமையிலான கும்பல் மேற்கொண்ட முயற்சி மாலை பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது ஏற்பட்ட மோதல்களால் தெஹிவளைப் பகுதியில் பெரும் பதற்றநிலை காணப்பட்டது.

இரண்டு பேருந்து வண்டிகளில் நேற்று முன்தினம் பிக்குகள் தலைமையில் வந்த கும்பல்கள் தெஹிவளை மிருகக்காட்சிச் சாலைக்கு அருகில் உள்ள கல்விகாரை வீதியிலுள்ள தருள் ரஹ்மான் மசூதி மீது கற்களைக் கொண்டு கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளார்கள்.

மசூதி அங்கிருந்து அகற்றப்பட வேண்டும்என வும் அவர்கள் கோஷம் எழுப்பினார்கள். இத் தாக்குதல் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

இதனையடுத்து கல்விகாரை முன்பாகக் கூடிய பிக்குகள் தலைமையிலான கும்பல்கள் அங்கிருந்து ஊர்வலமாக மீண்டும் மசூதிக்கு முன்பாக வந்து அதனை அங்கிருந்து அகற்றுமாறு கோரி மறியல் போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.



நிலைமைகள் கட்டு மீறிச் செல்வதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் உடனடியாகவே பொலிஸார் அப்பகுதிக்குக் குவிக்கப்பட்டு மசூதி மீதான தாக்குதலைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

தொடர்ந்தும் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும் தெஹிவளையில் பதற்ற நிலை காணப்படுகின்றது. இதேவேளையில் ஊடகவியலாளர்கள் சம்பவத்தைப் படம் எடுப்பதை ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## பொன்சேகாவுக்கு பாதுகாப்பு வழங்கப்படுமா?-தயாசிறி

### வழங்கப்படும் என்கிறார் அமைச்சர் தினேஷ்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு பாதுகாப்பு வழங்கப்படுமா என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் நாட்டிற்காக ஆற்றியுள்ள சேவையை கருத்திற் கொண்டும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் அவருக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க முடியாதா என அவர் மேலும் கேள்வியெழுப்பினார்.

சரத் பொன்சேகா அதற்கான கோரிக்கை எதனையும் முன்வைக்கவில்லை என ஆளுங்கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

பொது வேட்பாளராகப் போட்டியிட்ட பொன்சேகாவுக்கு அந்தத் தரப்பிலிருந்தே அச்சுறுத்தல் இருப்பதாக கூறுவதாயின் அது குறித்து ஆராய்ந்து பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது சபையில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றதுடன் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ குறுக்கிட்டு உரியவாறு சபை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

சமுர்த்திக் கொடுப்பனவை மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வரை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று ஐக்கியதேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் கூறினார்.

இதற்குப் பதிலளித்த பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன சமுர்த்திகொடுப்பனவின் மூலம் 17 வகையான நன்மைகளை மக்கள் அடைந்துகொள்வதாக குறிப்பிட்டார். (அ-2)


சவுதி அரேபியா விமான நிலையத்தில்

SAUDI ARABIAN AIRLINES



GROUND SERVICES

உடனடி தொழில் வாய்ப்பு

GENERAL WORKERS - 350 Nos.

பொது வேலையாட்கள் - 350 பேர்

சம்பளம் - SR 690/-

1 SR = Rs. 34/-

TEC. OPERATOR / DRIVERS - 50 Nos.

தொ.இயக்குனர் / சாரதிகள் - 50 பேர்

சம்பளம் - SR 1609/-

1 SR = Rs. 34/-

Terms & Conditions:

- உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி,போக்குவரத்து இலவசம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலையுடன், வாரத்தில் 1 நாள் விடுமுறை.
- 2 வருட ஒப்பந்த காலம்
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் ரூபா : 80,000/- மட்டுமே அறவிடப்படும்

பாஸ்போட்டுடன் உடன் நேரே வாருங்கள்

உடன் தொடர்புகளுக்கு: 0779283535

QP Employment (pvt) Ltd,

இல: 06, கெம்பல் டெரஸ், கொழும்பு - 10.

(பாஸ்போட் காரியாலயம் அருகில்) AL1316/Advt:/05/12

(சி/075)



ஆண்டுப் பொதுக்கூட்டம்

தலைவர்:- திரு.க. கதிரமலை

இடம்:- பாடசாலை மண்டபம்

காலம்:- 27.05.2012 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்:- கலை 10.00 மணி

அனைத்துப்பழைய மாணவர்களும் இப் பொதுக்கூட்டத்தில் பங்குபற்றி பாடசாலை யின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்,

(சி-087) பழையமாணவர் சங்கம்,

யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்.





ஆண்மை குறைவால்

குழந்தைகள் இல்லையே என்ற கவலையா? வீரியம் அதிகரிக்க, குழந்தை பாக்கியம் பெற

ஆலோசனைக்கு அழையுங்கள் 0750 252 141

(சி/073)



தேவை

பேபி கெயார்

நிறுவனத்திற்கு பெண்

விற்பனையாளர் தேவை

தொடர்பு :-

0771038040

(8515)



Immediate Vacancy

Canadian நிறுவனத்தின் வட கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த யாழ்ப்பாணம் ,வவுனியா, முல்லைத் தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட வுள்ள 04 கிளைகளுக்கு புதிதாக பயிற்சியளித்து சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர்.

தகைமைகள்:-O/L, A/L

சம்பளம்: 8000-15000வரை

பயிற்சிக்காலம்

பயிற்சியின் பின்:- 45000/-

தொடர்புகளுக்கு:- 0217200867

0775566224

(8510)



டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் மீள் பாவனைக்கு உட்படுத்தி தரப்படும்.

No. 06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

TP:- 021 2228680,

077 5925088, 075 0407430

(8508)



வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி பகுதியில் இரண்டு பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776181216

(8509)



வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாவலர் வீதி, ஐந்து சந்திக்கருகில் 1 1/2 பரப்பில் அமைந்துள்ள நான்கு அறைகள் கொண்ட பெரிய வீடு விற்பனைக்கு

தொடர்புகளுக்கு: 011 2366988, 0773366988, 0775127811

(8499)

# “இயற்கையுடன் ஒன்றிணைவோம்” ③

*சேதனப் பசளை உற்பத்தியை முற்கூட்டியே ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காகவும் போகத்திற்கு முன்னரான பயிர்ச் செய்கைத் திட்டமிடலிற்காகவும் மற்றும் MSc கற்கை நெறியின் அபிவிருத்திக்குரிய இதழியல் (Developmental Journalism) பாடத்தின் ஓர் அம்சமாகவும் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.*

### தாவர, விலங்கு கழிவுகளை பயன்படுத்த வேண்டிய அளவுகளும் பயன்படுத்தும் காலமும்

| சேதனப்பசளை வகை | | பயன்படுத்த வேண்டிய அளவு | பயன்படுத்த வேண்டிய காலம் |
|---|---|---|---|
| தாவரக் கழிவுகள் | கிளிறிசீடியா, முள் முருங்கை, காட்டுச் சூரியகாந்தி, பசுந்தாட்பசளை | சுமக்கக் கூடிய அளவான 30-40 கட்டுகள் ஒரு ஏக்கருக்கு போதுமானதாகும் | இதனைமுதலாவதுதடவை உழும் போது வைக்கோலை இடுவது போன்றே இட வேண்டும். இரண்டாம் முறை உழும் போது மண்ணுடன் சேர்த்து விட முடியும் |
| | பசுந்தாட் பசளை | ஏக்கருக்கு ஒரு தொன் | |
| விலங்கு எரு | மாட்டெரு/ சாணம் | ஏக்கருக்கு 2 தொன் எரு (4 சக்கர உழவு இயந்திரப் பெட்டியில் 2 போதுமானதாகும்) | இரண்டாம் முறை உழும் போது அல்லது சேறாக்கும் போது சாணம் அல்லது விலங்கு எருவை இட முடியும் |
| | கோழி எரு | ஏக்கருக்கு ஒரு தொன் அளவில் இடவேண்டும் | சிதைவடைந்த கோழி எரு (கன கூழம்) இரண்டாம் தடவை உழும் போது இடவேண்டும் |

### வைக்கோலிலுள்ள போசணை மூலகங்களின் அளவுகள்

| | உலர் நிறை வீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | நைதரசன் (N) | பொசுபரசு (P) | பொட்டாசியம் (K) | கந்தகம் (S) | சிலிக்கன் (Si) |
| வைக்கோலிலுள்ள போசணை மூலகங்கள் | 0.5-0.8 | 0.16-0.27 | 1.4-2.0 | 0.05-0.10 | 4-7 |

வைக்கோலை வயல்களுக்குப் பயன்படுத்தும் போது அதிலிலுள்ள போசணைப் பொருட்களின் அளவானது பல்வேறுபட்ட காரணிகளில் தங்கியுள்ளது. அதில் காணப்படும் போசணை மூலகங்களானது.

- பயிர் வளர்க்கப்படுகின்ற மண்ணின் தன்மை
- பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் போகம்
- காலநிலை
- நெல் இனம்
- பசளைப் பாவனை
- வேறு பயிர் பராமரிப்பு முறைகள்
- விளைச்சல்

பசளைப் பாவனையானது மண்ணின் வளத்தைப் பொறுத்து இடத்திற்கிடம் பேறுபடும். ஆகையால் உங்கள் வயல் மண்ணைப் பரிசோதிப்பதன் மூலம் மண் வளத்தை விரிவாக அறிந்து அதற்கு ஏற்றவாறு பசளைப் பாவனையை மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

#### வயலில் பெறப்படும் வைக்கோலை அவ் வயலிலேயே சேதனப் பசளையாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள்

- அடிக்கட்டுப் பசளையில் பொட்டாசியம் பசளைப் பாவனையை முற்றாகக் குறைக்க முடியும். (வைக்கோலில் பொட்டாசியம் அதிகளவு காணப்படுகின்றது.)
- ஒப்பீட்டளவில் அடிக்கட்டுப் பசளையாக குறைந்தளவு நைதரசன் பசளை தேவைப்படுகின்றது. (20-25 கிலோகிராம்/ ஹெக்டெயர்) மேற்கட்டுப் பசளையில் 10 கிலோகிராம் யூரியாவைக் குறைக்கலாம்.
- ஒரு வயலில் 3-4 போகத்திற்கு தொடர்ச்சியாக வைக்கோல் இடுவதால் அவ்வயலின் விளைச்சல் அண்ணளவாக 400-500 கிலோகிராம/ ஹெக்டெயர் இனால் அதிகரிக்கும்.
- மண்ணின் நீரைப் பிடித்து வைத்திருக்கும் தன்மை அதிகரிக்கின்றது.

#### வைக்கோலை வயல்களுக்கு பயன்படுத்தும் முறை

- வைக்கோலை வயலுக்கு இடும் போது இவை நன்கு உக்கிய நிலையில் இருத்தல் அவசியம்.
- நீர்ப்பாசன வயல் நிலங்களில்: ஒரு ஏக்கருக்கு வைக்கோலை இடுவதற்கு 1/2 மனித நாட்கள் போதுமானவையாகும். தரையை ஆயத்தம் செய்வதற்கு முன்னர் வைக்கோலை வயலிற்கு இட்டு சிதைவடைய விடுதல் வேண்டும். முதலாவது தடவை உழுதபின் வைக்கோலை வயல் முழுவதும் பரவி நீரைத் தேக்கி வைத்திருந்தால் இரண்டாவது தடவை இலகுவாக உழ முடியும்.
- மானாவாரி மேட்டு நிலங்களில்: வயல் மூலைகளில் தடிகளின் உதவி கொண்டு V வடிவத்தில் குவிப்பதன் மூலம் மழைநீர் வைக்கோல் குவியலினுள் தேங்கி நின்று வைக்கோல் உக்குவதற்கு வழிவகுக்கின்றது. இவ்வாறு குவிக்கப்படும் வைக்கோல் எட்டு மாதத்தில் உக்கி விடுவதால் இவற்றை மண்ணில் பரவி உழுது மண்ணுடன் கலந்து விடலாம். வைக்கோல் குவியலினுள் கையை துளைத்து ஒருபிடி வைக்கோலை எடுத்து கசக்கும் போது அவை நன்கு உதிர்ந்து போகும் நிலையில் இருப்பின் வைக்கோல் நன்கு உக்கி விட்டதற்கு அறிகுறியாகும்.

நெல் வயல்களில் வைக்கோலைப் பசளையாகப் பயன்படுத்துவது கூலி அதிகம் செலவாகும் ஒரு செயன்முறையாகும். அத்துடன் ஆரம்ப தரை பண்படுத்தலுக்கும் இடையூறாக இருந்தது. தற்பொழுது பரவலாகப் பயன்பாட்டிலுள்ள இணைந்த அறுவடை இயந்திரமானது (Combine Harvester) இதனை இலகுவாக்கி உதவுகின்றது.

இது அறுவடையின் போது வைக்கோலை சிறு துண்டுகளாக்கி சீராக வயலில் பரப்புகின்றது. இதனால் வைக்கோலானது உழவின் போது சிக்கிக் கொள்ளாமல் தடுக்கப்படுவதோடு எளிதில் சிதைவடைய வழி வகுக்கின்றது. மேலும் இணைந்த அறுவடை இயந்திரமானது நெற்பயிரில் தரமான நெல் மணி தவிர்ந்த ஏனைய பாகங்களை வயலிற்கே மீளவும் சேர்க்கின்றது.

தற்பொழுது பெரிய அளவில் இணைந்த அறுவடை இயந்திரம் பாவனையில் உள்ளதால் இதன் மூலம் அறுவடை செய்யும் வயல்களில் கழிவாக வீசப்படும் வைக்கோலை எரிக்காது உடனடியாக சுழல்கலப்பை மூலம் உழுது வயலுக்குள் தாழ்ப்பதனால் வைக்கோலில் உள்ள போசணைச் சத்துக்கள் நிலத்திற்குள் மீளச் செலுத்தப்படுவதோடு இழந்த மண் வளம் ஓரளவு ஈடு செய்யப்படுகின்றது. உவர் நிலங்களில் மண் உவராதலும் தடுக்கப்படுகின்றது.

**சுஜிதா சக்திவேல்**
விவசாய உத்தியோகத்தர்
பிரதி விவசாயப் பணிப்பாளர் [விரி] அலுவலகம்
கிளிநொச்சி

(தொடரும்)

# யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகளின் முடிபுகள்

**15 வயதின் கீழ் பிரிவு பெண்கள்**

**நீளம் பாய்தல்**

எஸ்.ஆரணி (யா/உடுப்பிட்டி சி.சி,) பி.டென்சிகா (யா/ இடைக்காடு ம.வி,) வி. சத்விகா (யா/ அருநோதயா கல்லூரி.)

**தட்டுஎறிதல்**

எஸ்.லக்ஸனா (யா/ கோப்பாய் நாவலர் வித்தியாலயம்) ஜி.அபர்ணா (யா/அராலி சரஸ் வதி வித்தியாலயம்), எஸ்.ரேமியா (யா/ கோப் பாய் கிறிஸ்தவ கல்லூரி)

**17 வயதின்கீழ் பிரிவு பெண்கள்**

**1500 மீற்றர்**

ஜே.ஆன் பற்றீசியா (யா/மாதகல் சென் ஜோசப் வித்தி, ஈ.ஜே.மேரி கனிஸ்ரா யா/ சென் தோமஸ் வித்தி, எஸ்.றினோஜா யா/ கட்டுவன்புலம் ம.வி.

**குண்டு எறிதல்**

ஆர்.ஜெயரசனி யா/கொக்குவில் இ.க, எஸ். கோபிகை யா/ விக்டோரியா கல்லூரி, எச். நதிசா யா/சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை

**முப்பாய்ச்சல்**

எஸ்.அனித்தா யா/ மகாஜனா கல்லூரி, கே.அகல்யா யா/ தும்பளை சிவப்பிரகாச வித்தி, எஸ்சுகன்யா யா/ வட்டு .இந்து கல்லூரி

**உயரம் பாய்தல்**

என்.சிவராகினி (யா/உடுவில் பெண்கள் கல்லூரி,) கே.துவாரகா யா/ வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, ரி.சுயர்ணியா யா/ இளவாலை மெய்கண்டான் ம.வி.

**400 மீற்றர்**

ஏ.ஆனட் யா/மாதகல் சென் ஜோசப் வித்தி, ஜே. நிசாந்தினி (யா/சென் அன்ரனி) , கே. கிருஷா (யா/சென் அன்ரனி மேரிஸ் றோ.க)

**19 வயதின் கீழ் பிரிவு பெண்கள்**

**1500 மீற்றர் ஓட்டம்**

ஏ.சிவஸ்திகா யா/விடத்தல்பளை கமலாசினி, ஏ.இன்பவாணி யா/ விக்டோறியா கல்லூரி, ஜே.மே மரி கரோலி யா/ எழுவை தீவு முருகவேல்

**ஈட்டி எறிதல்**

பி.றஜிதா யா/விக்டோறியா கல்லூரி, எஸ். சிந்துஜா யா/ வட்டு. இந்து கல்லூரி, எம். கமலினி யா/உடுவில் பெண்கள் கல்லூரி

**400 மீற்றர்**

எஸ்.நிரஞ்சனா யா/கொடிகாமம் திருநாவுக்கரசு, எஸ். லக்ஷா யா/இராமநாதன் கல்லூரி, ஜே.ஜோத்சி யா/ மாதகல் சென் ஜோசப் வித்தி

**நீளம்பாய்தல்**

ஏ.பவிதா யா/அருணோதயா கல்லூரி, எம். கமலினி யா/ வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி,ஆர். அகல்யா யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**100 மீற்றர் தடைதாண்டல்**

ரு.டன்சிகா யா/மகாஜனா கல்லூரி, டி.நிதுஜா யா/விக்டோறியா கல்லூரி, கே.கலைமகள் யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி

**முப்பாய்ச்சல்**

ஏ.பவித்ரா (யா/ அருணோதயா கல்லூரி, டி நிதுஜா, யா/ விக்டோறியா கல்லூரி, ஆர். அகல்யா யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

(தொடரும்)

# ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் தொடர்ச்சியாக ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை ஊடகவியலாளர்களின் பாதுகாப்பிற்காக தொடர்ச்சியாக குரல் கொடுக்கப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஊடகவியலாளர் பாதுகாப்பு மற்றும் மக்களின் கருத்து சுதந்திரம் ஆகியன உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரி கிறிஸ் எல்ம்ஸ் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

(அ-2)

# யாழ்ப்பாணம் பிறிமியர் லீக் துடுப்பாட்ட சுற்றுப் போட்டி

## இன்று ஆரம்பமாகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறிமியர் லீக் 2012 , ரி-20 பந்துப் பரிமாற்றத்தைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டி இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

உள்ளூர் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் இந்த துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் 8 அணிகள் மோதுகின்றன.

இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-6)

# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள் உங்களை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்



### "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
  1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
  2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.

### தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. திட்டத்தின் இயல்பு - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. உயர் நுழைவுக் கட்டணம் - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. நிதி வருமானங்கள் - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. மீண்டும் வாங்கும் கொள்கை - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல் - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.

**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம். இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

8. திட்டத்தைப் பற்றிய தகவல்கள் - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள் - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம், ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல் - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. பயிற்சிகளும் விற்பனை உதவிகளும் - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. திட்டத்தின் எதிர்காலம் - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. செயற்பாட்டுப் பிரதேசங்கள் - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

### குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்தினுடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பங்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமடங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு
தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

(அ/088)

# வடக்குக் கிழக்கில் மட்டுமல்ல அனைத்து மாகாணங்களிலும் படையினர் உள்ளனர்

## இராணுவப்பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டின் பாதுகாப்பு நலன்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு நோக்கங்களை அடைவதற்கு ஏற்பவே இராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய கூறியுள்ளார்.**

இலங்கையின் வடக்கு கிழக்கிலும் படையினரின் பிரசன்னமானது நாட்டின் ஏனைய பாகங்களிலும் உள்ள நிலையை ஒத்திருக்க வேண்டும் என பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கூறியமைக்கு பதிலளிக்கும் முகமாகவே இராணுவப் பேச்சாளர் மேற்படி தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கிலிருந்து பெரும் எண்ணிக்கையான படையினர் அகற்றப்பட்டு ஏனைய மாகாணங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நாம் எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தல் முழுமையாக நீங்கவில்லை. ஈழப் பிரிவினைவாதிகளின் நிகழ்ச்சி நிரல் இன்னும் உயிர்ப்புடன் உள்ளது. செய்தி ஊடகங்களில் இது மிக வெளிப்படையாக உள்ளது.

தமது தேவைகளுக்குப் பொருத்தமெனில் ஆயுதமோதலை ஏற்படுத்துவதற்கு மேலதிகமாக செயற்படத் தயங்காத பல சக்திகள் உள்ளன என அவர் கூறினார். எமது நாடு எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை இராணுவம் நன்கு புரிந்துகொண்டுள்ளது. தேவைகளை கவனமாக மதிப்பீடு செய்த பின் ஆயுதப் படையினர் வரிசைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இன்று வடக்கு கிழக்கில் மாத்திரமில்லாமல் பல மாகாணங்களிலும் படையினர் நிலைகொண்டுள்ளனர். நாடு முழுவதும் சிவில் நிர்வாகம் சிறப்பாக நிலைநாட்டப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்குக் கிழக்கில் சிவில் அதிகாரிகள் கோரினால் தவிர படையினர் எந்த பாத்திரத்தையும் வகிப்பதில்லை.

நாம் சுதந்திரம் பெற்ற காலத்தில் பிரித்தானிய ஆயுத படைகளிடமிருந்து இராணுவ பாரம்பரியங்களையும் தொழிற்சார் அடிப்படைகளையும் பெற்றுக்கொண்டோம்.

எமது இராணுவக் கோட்பாடானது பிரிட்டனின் ஏனைய முன்னாள் காலனித்துவ நாடுகளிலுள்ளதைப் போன்று பிரித்தானிய இராணுவக் கோட்பாட்டின் அடிப்படையிலானவையாகும் என அவர் கூறினார்.

இலங்கை பாதுகாப்பு படைகளின் பிரசன்னமானது சர்வதேச நியமனங்களுக்கு ஏற்ப உள்ளது.

பல சக்திவாய்ந்த நாடுகள் தமது பிரதான நிலப்பரப்பிலிருந்து வெகு தொலைவில் ஆயுதப் படையினரை ஈடுபடுத்தியுள்ளன. சில நாடுகள் தமது பிரதான நிலப்பரப்பிலிருந்து 8 ஆயிரம் மைல்கள் தொலைவிலும் படையினரை நிறுத்தியுள்ளன.

இலங்கை ஆயுதப்படையினர் ஐ.நா. அமைதிகாக்கும் படை நடவடிக்கைகளுக்காக தவிர எமது தேசிய எல்லைக்குள்ளே நிறுத்தப்பட்டுள்ளனர் என அவர் கூறினார். (அ-2)

# முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகம் மீது தீ வைப்பு



(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு காத்தான்குடியில் திறக்கப்படவிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகம் தீ வைக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது. புதிய காத்தான்குடி ஏத் துக்கால் வீதியில் அமைக்கப்பட்டிருந்த இவ் அலுவலகம் நேற்றைய தினம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலை வரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமினால் திறந்து வைக்கப்படவிருந்த நிலையிலேயே இனந்தெரியாத நபர்களினால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# கலிபோர்னியாவில் முள்ளிவாய்க்கால் மூன்றாமாண்டு நினைவேந்தல் நிகழ்வு

(கொழும்பு)



முள்ளிவாய்க்கால் மூன்றாமாண்டு நினைவேந்தல் நிகழ்வு அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் வண கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் ஆகியோர் இந்நினைவேந்தல் நிகழ்வில் கூட்டாக பங்கேற்றனர்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையினை நினைவேந்தி ஆற்றப்பட்ட உரைகளில் ஈழத்தமிழர்களுக்கான நீதியை வலியுறுத்தி நின்றனர். தொடர்ந்து முள்ளிவாய்ககால் இனப்படுகொலையின் பின்னரான ஈழத்தமிழர்களின் அரசியல் குறித்து கருத்துப்பரிமாற்றம் இடம்பெற்றிருந்தது. (அ-2)

# ஆசிய கையடக்கத் தொலைபேசி மாநாடு

(கொழும்பு)

மூன்றாவது ஆசிய கைத்தொலைபேசி மாநாடு இலங்கையில் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

பிராந்திய ரீதியான பல்வேறு நவீன கையடக்கத் தொலைபேசிகள் இதன்போது சமர்ப்பிக்கப்படவுள்ளன.

அத்துடன் சர்வதேச ரீதியாக இந்தத் துறை சார்ந்த ஆய்வாளர்கள், முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் போன்றவர்களும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

# மனிதவுரிமைகளைப் பற்றிபேச அமெரிக்காவுக்கு தகுதியில்லை

## அமைச்சர் சம்பிக்க கூறுகின்றார்

மனித உரிமை மீறல்கள் குறித்து பேச அமெரிக்காவிற்கு தார்மீக உரிமை கிடையாது. அநாகரிகமான முறையில் இலங்கை விவகாரங்களில் தலையிடுவதை அமெரிக்கா உடனடியாக நிறுத்த வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய அரசியலை விமர்சிக்கும் அதிகாரம் எந்தவொரு அந்நிய நாட்டிற்கும் கிடையாது. அதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கக்கூடாது. போலியான மனித உரிமை குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இலங்கையின் நற்பெயரை சீரழிக்க மேற்குலக சக்திகள் முன்னெடுக்கும் சூழ்ச்சியை தோல்விடைய செய்ய வேண்டும்.

பல நாடுகளில் மனித உரிமைகள் நிலை குறித்து அமெரிக்கா விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கையில் இலங்கை தொடர்பிலும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா முன்வைத்துள்ளது.

குடும்ப ஆட்சி, ஆட்கடத்தல், ஊடக அடக்குமுறையென்று பல்வேறு குற்றச்சாட்டுக்களை அடிப்படையற்ற முறையில் அமெரிக்கா முன்வைத்துள்ளது. இதனை ஜாதிக ஹெல உறுமய வன்மையாக கண்டிக்கின்றது.

ஏனெனில் பிரிவினைவாத சக்திகளுக்கு ஏற்ற வகையில் நாட்டின் சூழலை மாற்றியமைக்க அமெரிக்கா தலைமையிலான சர்வதேச குழு கடந்த பல வருடங்களாகவே செயற்படுகின்றது. குறிப்பாக புலிகளை அப்புறப்படுத்தியதன் பின்னர் இச் சக்திகள் கடுமையாக செயற்பட ஆரம்பித்தன.

இதனை வேடிக்கை பார்ப்பது நாட்டின் எதிர்காலத்திற்கு நலனாக அமையாது. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பேச அமெரிக்காவிற்கு எவ்வித மான தகுதியும் கிடையாது. ஏனெனில் உலகில் மிகவும் மோசமான முறையில் மனித உரிமைகளை மீறுவது அமெரிக்காவேயாகும். இதனை ஹிலாரி கிளின்டன் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# அழுத்தங்களை வெற்றிகொள்ள ஆட்சி மாற்றம் ஏற்படவேண்டும்

## ஜே.வி.பி. பொதுச்செயலாளர் தெரிவிப்பு

நாட்டிற்கு எதிரான சர்வதேச அழுத்தங்களை வெற்றிகொள்ள வேண்டுமாயின் உள்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படவேண்டும். இதற்கான விஸ்தரிக்கப்பட்ட செயற்றிட்டமொன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கவுள்ளோம் என ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசியல்தீர்வு மற்றும் பொருளாதார வீழ்ச்சி உட்பட இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பல பிரச்சினைகளுக்குத் தற்போதைய அரசாங்கத்தினால் ஒருபோதும் தீர்வை வழங்கமுடியாது. எனவே அனைத்துத் தரப்புகளும் ஒன்றிணைவதே தற்போது சிறந்தது.

தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் நாடு பெரும் ஆபத்துக்களை எதிர்கொண்டு வருகின்றது. குறிப்பாக நாட்டிற்கு எதிரான சர்வதேச நாடுகளின் முன்னெடுப்புக்களானது மிகவும் ஆபத்தான சூழலையே ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் அரசாங்கமோ தமது ஏமாற்று வேலைகளையும் போலி நடிப்புகளையும் உள்நாட்டில் மேடையேற்றி வருகின்றது. அரசாங்கத்திற்கு நாட்டின் மீதோ மக்களின் மீதோ அக்கறையில்லாத நிலையே உள்ளது என்றார். (அ-2)

# விற்கப்படவிருந்த பளிங்கு புத்தர்சிலை கைப்பற்றப்பட்டது

## ஐவர் கைதாகினர்

(கொழும்பு)

மஹியங்கனை கிராந்துரு கோட்டை பிரதேசத்தில் பளிங்கு கல்லினாலான புத்தர் சிலையொன்று விற்கப்படவிருந்த போது பொலிஸ் புலனாய்வுப் பிரிவு மூலம் மஹியங்கனை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் 5 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைப்பற்றப்பட்ட புத்தர்சிலை 24 கிலோ 400 கிராம் எடை கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நேற்றைய தினம் மஹியங்கனை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதிபதி குறித்த சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்கும் படி உத்தரவு பிறப்பித்தார். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 141



ஹாலண்ட் போர்முனை-1944

செப்ரம்பர் மாதத்தின் ஆரம்பத்தில், பெல்ஜியத்தில் நேசநாட்டுத் துருப்புகள் வருவதற்கு முன்னரே பல நகரங்களையும் பிராந்தியங்களையும் விடுவித்த தேசபக்தர்களின் ஆயுத எழுச்சிகள் தொடங்கின. செப்ரம்பர் 3 ஆம் திகதி 2-வது பிரிட்டிஷ் படை பிரஸ்ஸெல்சிலும் அடுத்த நாளன்று தேசபக்தர்களால் விடுவிக்கப்பட்ட அன்த்வேர்பனிலும் நுழைந்தது.

1944 ஆம் ஆண்டு செப்ரம்பர் நடுவில் அமெரிக்க- பிரிட்டிஷ் துருப்புகள் கிட்டத்தட்ட பெல்ஜியப் பரப்பு முழுவதையும் பிடித்து ஹாலந்தின் எல்லைகளையும் ஜேர்மனியர்களின் பலப்படுத்தப்பட்ட கோடாகிய •ஸிக்பிரிட் நிலையின் வாயில்களையும் அணுகின. இதில் எதிரியின் எதிர்ப்பைச் சந்தித்த நேச நாட்டுப் படைத்தலைமை, ரைனில் உள்ள தாக்குமுனையைக் கைப்பற்றி ஷெல்தா ஆற்று முகப்பை ஜேர்மனியர்களிடமிருந்து விடுவித்து ஜேர்மனியின் ஆழத்தினுள் மேற்கொண்டு முன்னேறுவதற்குத் தேவையான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும் பொருட்டு ஹாலந்தின் வழியாக இதன் வடக்குத் திசையில் செல்வதென முடிவு செய்தது.

ஹாலந்து நடவடிக்கை என்று வரலாற்றில் அறியப்பட்ட இந்நடவடிக்கையின் நிறைவேற்றத்திற்காக 2-வது பிரிட்டிஷ் மற்றும் 1-வது கனடாப்படைகள் அடங்கிய 21-வது ஆர்மித்தொகுதி மொன்ட்கமேரியின் தலைமையின் கீழ் ஒதுக்கப்பட்டது.

3.2 கி.மீ. அகலமுள்ள இடத்தில் ஜேர்மனியர்களின் தற்காப்பைப் பிளக்கும் பொருட்டு 30-வது பிரிட்டிஷ் கோர்பஸின் சக்திகளைக் கொண்டு பிரதான தாக்குதலைத் தொடுக்கவும் வான் இறக்குப் படையின் பரஸ்பர செயலாக்கத்துடன் அர்னேம் திசையில் தாக்கவும் திட்டமிடப்பட்டது. 101-வது பிரிட்டிஷ் வான் இறக்குப்படை டிவிசனையும் எய்ன்ட் ஹோவென் பிரதேசத்திலும் 82வது டிவிஷனை நேய்மெஹனிலும் முதலாவது வான் இறக்குபடை டிவிஷனையும் போலந்து பாராசூட் பிரிகேடையும் அர்னேமிற்கு வடக்கேயும் இறக்கத்திட்டமிடப்பட்டது. இவை மாஸ், வால், ரைன் ஆகிய நதிகளின் ஊடேயான கடக்கும் வழிகளைப் பிடித்து, மொன்ட்கமேரி கம்பளம் என்ற ழைக்கப்பட்டதை ஏற்படுத்தி இப்பிரதேசங்களுக்கு தரைப்படைகள் வரும்வரை இவற்றை வைத்திருக்க வேண்டும்.

மற்ற இரண்டு பிரிட்டிஷ் கோர்பஸ்களும் பிளந்து செல்லும் போர்முனையை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் முக்கியத் தாக்குதல் படைத்திரட்டின் பக்கவாட்டுப்பகுதியில் இயங்குமாறு கட்டளையிடப்பட்டது.

1-வது கனடாபடைக்கு, புலோன், காலே மற்றும் டியூன்கெர்க் ஆகிய இடங்களில் சுற்றிவளைக்கப்பட்ட எதிரியின் படைத்திரட்டுகளை ஒழித்துக்கட்டி, ஷெல்தா ஆற்று முகப்பை பாசிசத்துருப்புகளிடமிருந்து விடுவித்து, மேற்கொண்டு ரோட்டர்டாம், ஆம்ஸ்டர்டாம் நோக்கி முன்னேறுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.



வான் இறக்குபடை நடவடிக்கை-1944

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

விண்ணிலிருந்து 2-வது பிரிட்டிஷ் படைக்கு ஆதரவளிப்பதற்காக 650 விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன.


9 டிவிசன்களையும் 2 சண்டைப் பிரிவுகளையும் உள்ளடக்கியிருந்த ஜேர்மனியின் 15-வது போர்க்களப் படையும் 1-வது பாராசூட் படையும் நேச நாட்டுத்துருப்புகளை எதிர்த்து நின்றன. இந்த யூனிட்டுக்கள் எல்லாம் ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் 55-60 சதவிகிதம்தான் முழுமை பெற்றிருந்தன. அர்னேம் திசையில் 85 கி.மீ. நீளமுள்ள போர்முனையில் எதிரியின் 4 டிவிஷன்களின் படைப் பிரிவுகள் மட்டுமே தற்காப்பில் நின்றன.

2-வது பிரிட்டிஷ் படையின் மண்டலத்தில் நேச நாட்டினர் காலாட் படை மற்றும் பீரங்கிகளின் 2 மடங்கும் விமானப்படை, டாங்கிகளில் முற்று முழுமையாகவும் எதிரியை விஞ்சி நின்றனர்.

செப்ரம்பர் 17 ஆம்திகதி குறுகிய பூர்வாங்க விமானப்படைத் தாக்குதல் மற்றும் 10 நிமிட பீரங்கித் தாக்குதலுக்குப்பின் நேசநாட்டுத் துருப்புகள் தாக்குதலில் இறங்கி நாளின் முடிவில் 10 கி.மீ. ஆழத்திற்கு முன்னேறின.

இதே நாளன்று அதற்கடுத்த நாளும் வேகெல், கிராவே, அர்னேம் பிரதேசங்களில் திடீர் குண்டு தாக்குதல்களைத் தொடுத்தபின் வான் இறக்குப்படைகள் இறக்கப்பட்டன.

முன்னணியிலிருந்து தாக்கிய 30-வது ஆர்மி கோர்பஸ் எய்ண்ட் ஹோவெனைச் சுற்றிச்சென்று 101-வது வான் இறக்குப்படை டிவிசனுடன் இணைந்தது. செப்ரம்பர் 20 ஆம் திகதி இக்கோர்பஸ் குறுகலான இடத்தில் நேய்மெஹெனை அடைந்து 82-வது வான் இறக்குப்படை டிவிசனுடன் இணைந்தது. முக்கியத் தாக்குதல் படைத் திரட்டின் பக்கவாட்டுப் பகுதிகளில் முன்னேறிய 8-வது, 12-வது ஆர்மி கோர்பஸ்கள் மெதுவாக முன்னேறின.



பிரிட்டிஷ் மகாராணி தன்னுடைய படைஅணிவகுப்பு மரியாதையை ஏற்கிறார்-1944

அர்னேம் பிரதேசத்தில் ஜேர்மனிய டாங்கி டிவிசனுக்கு அருகே இறக்கப்பட்டு, முன்னிருந்து தாக்கிய துருப்புகளால் ஆதரிக்கப்படாத 1-வது பிரிட்டிஷ் வான் இறக்குப்படையும் போலந்து பாராசூட் பிரிகேடும் முறியடிக்கப்பட்டன. வான் இறக்குப் படைப் பிரிவுகளின் மிச்சசொச்சங் கள் மட்டுமே தெற்கு நோக்கிப் பிளந்து சென்று தம் துருப்புகளுடன் இணைந்தன. செப்ரம்பர் இறுதியில் 2-வது பிரிட்டிஷ்படை அர்னேமிற்கு மேற்கே கீழ் ரைன் ஆற்றின் தென்கரையில் தற்காப்பிற்கு மாறியது.

10 நாட்கள் நேச நாட்டுத் துருப்புகள் 80 கி.மீ. ஆழத்திற்கு முன்னேறி 25 முதல் 40 கி.மீ. வரை பிளவை விரிவுபடுத்தின. ஆனால், நடவடிக்கையின் நோக்கம் நிறைவேற்றப் படவில்லை. ஹாலந்தில் பாசிச ஜேர்மனியத்துருப்புகள் முறியடிக் கப்படவில்லை. அதேபொழுது வடக்கேயிருந்து ஸிக்பிரிட் கோட்டைச் சுற்றிக்கொண்டு மியூன்ஸ்தெர் திசையில் தாக்குதலைத் தொடுப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகளும் தோற்றுவிக்கப்படவில்லை.

2-வது கனடா படை பாடெகாலெ ஜலசந்தி தென்கரையோரமாகத் தாக்கி புலோன், காலே துறைமுகங்களைப் பிடித்தது, டியூன்கெர்கை முற்றுகையிட்டது. செப்ரம்பர் இறுதியில் ஷெல்தா ஆற்று முகப்பை அடைந்தது. ஹாலந்து நடவடிக்கையில் ஒரு சிறப்பு அம்சம் என்னவெனில், அக்கால கட்டத்திலேயே மிகப்பெரும் வான் இறக்குப்படை இதில் பயன்படுத்தப்பட்டதாகும். ஆனால், இதன் தயாரிப்பின் போது பெரும் தவறு ஒன்று செய்யப்பட்டது. அர்னேம் பிரதேசத்தில் டாங்கிப் படைப்பிரிவுகள் இருப்பதை, நேச நாட்டவரின் வேவுத்துறையால் கண்டுபிடிக்க இயலவில்லை. அத்தோடு கூட படையிறக்கம் மிகவும் முன்கூட்டியே நடந்தன. சக்திகள் சிதறிக்கிடந்தன, பிரதான திசையில் குறைவான வேகத்தில் முன்னேறியதாலும் முக்கியத் தாக்குதல் படைத்திரட்டின் பக்கவாட்டுப்பகுதிகளில் சுறுசுறுப்பாகச் செயல்படாததாலும் தரைப் படைத் துருப்பகளால் உரிய நேரத்தில் இறக்குப்படைக்கு உதவ முடியவில்லை.

(தொடரும்)

# மே 18 மனிதப்படுகொலை நாள்!













இலங்கையில் தமிழனத்திற்கு எதிரான இறுதிப்போரில் ஒன்றரை இலட்சம் தமிழர்களைக் கொன்று குவித்த சிங்கள இராணுவத்தினர், முள்ளிவாய்க்காலில் கடைசி நாளில் மட்டும் 50 ஆயிரம் தமிழர்களை

**நக்கீரன்**

படுகொலை செய்தனர். இந்த இனப்படுகொலைகள் நிகழ்ந்து மூன்று வருடங்கள் முடிந்து விட்டன. மூன்றாம் வருடத்து நினைவு நாளை தமிழகம் தொடங்கி உலகம் முழுவதும் போர்க்குற்ற நாளாக கடைப்பிடித்ததுடன் தமிழீழத்தை உருவாக்க பொது வாக்கெடுப்பு நடத்து என்று வலியுறுத்தியுள்ளனர் தமிழர்கள்.

சென்னை மெரினாவில் வீரவணக்க



ஒன்று கூடலுக்கு மே 17 மற்றும் பெரியார் திராவிடக்கழகம் உள்ளிட்ட அமைப்புகள் அழைப்பு விடுத்திருந்தன. அதன்படி மிக எழுச்சியுடன் ஒன்றுகூடல் நடந்தது. மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் தலைமையில் நடந்த இந்த ஒன்று கூடலில் பழநெடுமாறன், வைகோ, கொளத்தூர் மணி, விடுதலை இராஜேந்திரன், ம.நடராசன், காசி ஆனந்தன், அறிவுமதி, புகழேந்தி தங்கராஜ், பெ. மணியரசன், வீரசந்தானம், மருதுஉள்ளிட்ட பலரும் கலந்து கொள்ள... தமிழின உணர்வாளர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திரண்டிருந்தனர். படுகொலையுண்ட தமிழர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இலங்கை அரசு இனப்படுகொலை அரசு. அதன்மீது சர்வதேச விசாரணையை உடனே நடத்து; இந்திய அரசின் துரோகத்தை மறக்கமாட்டோம்; மன்னிக்கமாட்டோம்; உள்ளிட்ட பல முழக்கங்களை எழுப்பினர். மெழுகுவர்த்தி ஏந்தி நினைவஞ்சலி செலுத்தினர். உணர்வாளர்கள். இந்த ஒன்று கூடலில், தமிழனத்தின் மீதான தனது உணர்வுளை பதிவு செய்ய பீகாரிலிருந்து வந்து கலந்து கொண்ட லோக் ஜனசக்தி கட்சி தலைவர் ராம் விலாஸ் பஸ்வான், தமிழீழத்தில் சிங்கள அரசு நடத் தியது, திட்டமிட்ட இனப்படுகொலை. இந்த இனப்படுகொலைகளுக்காக சிங்கள அரசு மீது போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும். இலங்கை இன சிக்கலுக்கு ஒரே தீர்வு தமிழீழம்தான். அதற்கான பொது வாக்கெடுப்பை நடத்த ஐ.நா. மன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை அழுத்தமாக வலியுறுத்தினார். ஒன்று கூடலில் கலந்து கொண்ட மக்களிடம் கையெழுத்து வாங்கிய, ஒரு கோடி கையெழுத்து இயக்கத்தினரை தம் அருகில் அழைத்து தனது கையெழுத்தை பதிவு செய்தார் ராம்விலாஸ் பஸ்வான்.

முள்ளிவாய்க்காலின் துயர நாளின் நினைவேந்தல் பொதுக்கூட்டத்தை கடலூரில் நடத்தினார் தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன். இதில், அக்கட்சியை சேர்ந்த 10 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் பெருந்திரளாக திரண்டிருந்தனர். இலங்கை அரசின் தமிழின அழிப்பையும் இந்திய அரசின் துரோகத்தையும் பட்டியலிட்டு ஆவேசப்பட்ட வேல்முருகன், வெள்ளையர்கள் ஆளும் நாடுகள்கூட, இலங்கையில் நடந்திருப்பது இனப்படுகொலைதான் என்று அறிவித்து இலங்கை ஜனாதிபதிமீது போர்க்குற்ற விசாரணை நடத்து எனக்குரல் கொடுக்கிறது. ஆனால், அத்தகைய குரல் கொடுக்கவேண்டிய இந்திய அரசு, ஒரு குழுவை மட்டும் அனுப்பி வைத்து நாடகமாடுகிறது. இலங்கையோடு இந்தியாவையும் சேர்த்து போர்க்குற்ற விசாரனை நடத்த வேண்டும். தமிழீழப்பயிருக்கு நம் இயக்கத்தினர் எருவாக இருத்தல் வேண்டும் என்று உணர்ச்சி வயப்பட்டார்.

அதேபோல ம.தி.மு.க. விடுதலை சிறுத்தைகள் நாம் தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், தமிழர் எழுச்சி இயக்கம் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்கள் முள்ளி

## தமிழீழத்தை உருவாக்க பொது வாக்கெடுப்பு நடத்து!

வாய்க்கால் படுகொலையின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியை எழுச்சியுடன் நடத்தினர். அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, பிரிட்டன், பிரான்ஸ், சுவிஸ், நோர்வே உள்ளிட்ட பல நாடுகளிலும் முள்ளிவாய்க்கால் துயரத்தை தமிழீழத்தின் தேசிய துக்க நாளாகவும் போர்க்குற்ற நாளாகவும் அனுஷ்டித்தனர். இந்த நாடுகளில் நிகழ்ந்த நினைவேந்தல் ஒன்று கூடலில் இலட்சக்கணக்கான தமிழர்கள் ஒன்று திரண்டு, உலக நாடுகளே தமிழீழத்தை அங்கீகரி... ஐ.நா. சபையே பொதுவாக்கெடுப்பை நடத்து என்று ஓங்கி குரல் கொடுத்தனர். கடனடாவில் நடந்த நிகழ்வில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். கனடாவிற்கு வந்திருந்த பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் சிபெய்ன்மக்டோனா இந்த நிகழ்வில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில், முள்ளி


புலம் பெயர் பிரதேசத்தில் 2012 மே 18 நினைவேந்தல் நிகழ்வு

வாய்க்கால் ஒரு முடிவல்ல. அதுவே ஒரு முடிவிற்கான ஆரம்பம். வலியைத் தந்தவனுக்கு வலியைக் கொடுப்போம் என்ற தேசியத் தலைவரின் வீரிய சிந்தனைக்கு நேரடி வடிவம் கொடுத்த இந்த நிலத்தையே முள்ளிவாய்க்காலாக வரித்துக் கொண்டு நாம் கூடியிருக்கும் இன்றைய நாளில் நாம் அனைவரும் ஏற்றத் தாழ்வுகளின்றி ஒரு வீரசபதம் எடுக்கின்றோம். வலியைக் கொடுத் தவனுக்கு அந்த வலியைத்திருப்பித் தருவோம். எமக்காக நியாயம் கேட்கும் நாடுகளின் கரங்களை உறுதியாகப் பற்றிக் கொண்டு தமிழீழ தேசியத்தை கட்டியெழுப்ப உறுதி பூணுவோம். தமிழ்த் தேசியத்தை அழிக்க நினைப்பவர்


மரீனா கடற்கரை 2012 மே 18 நினைவேந்தல் நிகழ்வு

களை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிறுத்துவோம். போர்க்குற்றம் புரிந்த இலங்கை ஆட்சி பீடத்தை தண்டித்தே தீரவேண்டும். இனப்படுகொலை குற்றவாளிகளை கூண்டில் ஏற்றுவோம். அதுவரை ஓயமாட்டோம்; ஓயமாட்டோம். போர்க்குற்ற நாளின் மூன்றாம் ஆண்டில் எங்கள் விழுதுகளை அணைத்து... வேர்களை இணைத்து தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற சபதத்தை ஏற்கிறோம் என்று பிரகடனம் செய்தனர் புலம் பெயர் தமிழர்கள்.

கனடாவைப்போல லண்டனில் நடந்த


மரீனா கடற்கரை 2012 மே 18 நினைவேந்தல் நிகழ்வு

நிகழ்விலும் அனைத்து அரசியல் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். இலங்கை அரசுக்கு எதிராக போக்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணையை தொடங்குவதற்கான முயற்சியை எடுத்தல். ஐ.நா. மன்றத்தில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்த வலியுறுத்தல், இராஜபக்சவின் பிரிட்டன் வருகையை தடுத்து நிறுத்தல், அடுத்தவருடம் இலங்கையில் நடக்கவிருக்கும் கொமன்வெல்த் நாடுகளின் மாநாட்டை வேறு நாட்டிற்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை தீவிரப்படுத்துதல் ஆகியவை குறித்து பேசினர். இந்த நிகழ்வின் போது பல்வேறு நாடுகளின் அமைச்சர்களும் உறுப்பினர்களும் அனுப்பிய செய்தியினை ஒலிபரப்பினர். பிரிட்டனின் ஆளும் கட்சியான கன்சர்வேட்டிக் கட்சி உறுப்பினர் கிரான் சேப்ஸ், இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதனை பிரித்தானிய அரசு ஏற்றுக்கொள்ள வலியுறுத்துவேன். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தா விட்டால், இலங்கையில் நடக்கவிருக்கும் கொமன்வெல்த் நாடுகளின் மாநாட்டை பிரிட்டன் புறக்கணிக்கும் என்று கடுமையாக எச்சரித்தார்.

முள்ளிவாய்க்கால் துயரத்தின் மூன்றாம் ஆண்டில் தமிழகம் தொடங்கி அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் முழுவதும் நினைவேந்தல் நிகழ்ச்சிகளில் தமிழீழம் உருவாக தமிழர்கள் சபதம் எடுத்திருப்பது சர்வதேச நாடுகளால் உற்றுக் கவனிக்கப்பட்டு வருகிறது.

# வெளிநாடுகளிலுள்ள இலங்கை அகதிகள் தொடர்பில் கரிசனை

## இலங்கைக்கான யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை விட வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் குறித்து அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் (யு.என்.எச்.சி.ஆர்) அதிக கவனம் செலுத்துவதாக அவ்வமைப்பின் இலங்கை பிரதியான மைக்கல் ஸ்வாக் கூறியுள்ளார்.

காலம் செல்லச்செல்ல உள்நாட்டில் இடம்பெயர்ந்து திரும்புபவர்கள் தொடர்பாக எமது ஈடுபாடு குறைவடைந்து வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தவர்களில் கவனம் குவிக்கப்படும்.

இந்தியா, மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலுள்ள அகதிகள் இலங்கைக்கு இடம்பெயர்ந்து குடியமர்த்துவதற்கு நாம் ஆதரவளிக்கின்றோம் என வவுனியாவுக்கு நேற்று முன்தினம் மேற்கொண்ட விஜ யத்தின் போது அவர் கூறியுள்ளார்.

கிளிநொச்சி பகுதியின் அபிவிருத்திகளையும் அவர் பாராட்டினார். கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றம் நம்பமுடியாததாக உள்ளது. சுப்பர் மார்க்கெட்டுகள் முறையான பொது போக்குவரத்து வசதிகள் காணப்படுகின்றன.

ஆனால் நிரந்தர வீடமைப்பு திட்டங்களின் போது இடம்பெயர்ந்த மக்களுக்கு நிரந்தரவீடுகளை நிர்மாணித்து நாம் உதவவில்லை. ஆனால் முறையான பயணாளிகளை தெரிவு செய்வதிலும் வழிகாட்டல்களை வழங்குவதிலும் பெரிய நன்கொடையாளர்களுக்கும் அரசாங்கங்களுக்கும் நாம் உதவுகிறோம் என அவர் கூறினார். (அ-2)

# விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்கப்படும்- சந்திரசேன

நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விவசாய ஓய்வூதியம் கூடிய விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என கமநல சேவைகள் மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார். விவசாய ஓய்வூதியத்துக்காக அறவிடப்பட்ட தொகை அதீகரிக்கப்படாத போதிலும் அதற்காக வழங்கப்படும் தொகை பலமுறை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட நிதி நெருக்கடியினால் அதனை வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டது.

இதனை கிராம விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்பதில் ஜனாதிபதியும் கூடுதல் கரிசனை காட்டி வருகிறார் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பால்ரின் திருடிய நபருக்கு மூன்று மாத சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

பல் பொருள் விற்பனை நிலையமொன்றில், இரண்டு பால்ரின்களை திருடியவருக்கு யாழ். நீதிமன்றம் 3 மாத சிறைத் தண்டனை விதித்துள்ளது.

யாழ். நகரிலுள்ள விற்பனை நிறுவனமொன்றில் கடந்த 10 ஆம் திகதி ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான இரு பால்ரின்களை திருடினார் என்ற குற்றச்சாட்டில் யாழ். பொலிஸாரால் நெடுந்தீவினைச் சேர்ந்த நபரொருவர் கைது செய்யப்பட்டு மன்றில் ஆஜர்படுத்தப்பட்டு 10 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். நேற்று முன்தினம் மீண்டும் குறித்த வழக்கு யாழ். நீதவான் மா.கணேசராசா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபருக்கு ஏற்கனவே முற் குற்றங்கள் காணப்பட்டதனால் 3 மாத சிறைத்தண்டனையோடு ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (அ-4)

# பொன்சேகா அரசியல்ரீதியான சவால்களைவிடுக்கமுடியாது

## அமைச்சர் மேர்வின் கூறுகிறார்

(கொழும்பு)

சரத் பொன்சேகாவுக்கு சுதந்திரமாக அரசியலில் ஈடுபடும் உரிமை இருப்பதாக மக்கள் விவகார மற்றும் மக்கள் தொடர்பாடல் துறை அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் பொன்சேகா அரசியலில் ஈடுபடுவது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு எந்த சவாலையும் ஏற்படுத்தப் போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு பொன்சேகாவினால் அரசியல் ரீதியான சவால்களை விடுக்க முடியாது. நாட்டில் உள்ள பெரும்பாலான மக்கள் ஜனாதிபதி மேற்கொண்டு வரும் அபிவிருத்தி பணிகள் தொடர்பில் தெளிவாக உள்ளனர். இதனால் மக்களின் விருப்பம் இருக்கும் வரை நாட்டை ஆட்சி செய்ய போவது ஜனாதிபதியேயாகும்.

அதேபோல் பொன்கோ போன்ற நாட்டில் எவரும் சுதந்திரமாக அரசியலில் ஈடுபட முடியும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# 2012.05 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1703-ரஷ்ய சார் மன்னன் முதலாம் பீற்றர் புனித பீட்டர்ஸ்பேர்க் நகரை அமைத்தான்.

★ 1860-இத்தாலியின் ஒற்றுமைக்காக கரிபால்டி சிசிலியின் பலேர்மோ நகரில் தாக்குதலை ஆரம்பித்தான்.

★ 1883-ரஷ்யாவின் மன்னனாக மூன்றாம் அலெக்சாண்டர் முடி சூடினான்.

★ 1937-கலிபோர்னியாவில் கோல்டன் கேட்பாலம் திறக்கப்பட்டது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: பிரான்சில் டன்கேர்க் என்ற இடத்தில் ஜேர்மனியரிடம் சரணடைந்த ஐக்கிய இராச்சியத்தின் நோர்ஃபோக் பிரிவைச் சேர்ந்த 99 பேரில் 97 பேர் உயிரிழந்தனர்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் பிஸ்மார்க் போர்க் கப்பல் வட அட்லாண்டிக்கில் மூழ்கடிக்கப்பட்டதில் 2 ஆயிரத்து 100 பேர் உயிரிழந்தனர்.

★ 1960-துருக்கியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் போது செலால் பயார் ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 1965-வியட்நாம் போர்: அமெரிக்கப் போர்க்கப்பல்கள் தெற்கு வியட்நாம் மீது குண்டுகள் வீசித் தாக்குதலைத் தொடுத்தன.

★ 1967-அவுஸ்திரேலியாவில் நடந்த வாக்கெடுப்பில் ஆதிவாசிகளை மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் அடக்கவும் அவர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்க மக்கள் அங்கீகாரம் அளித்தனர்.

★ 1994-சோவியத் அதிருப்தியாளர் அலெக்சாண்டர் சொல்ஷெனிட்சின் 20 ஆண்டுகளின் பின்னர் ரஷ்யா திரும்பினார்.

★ 2006-ஜாவாவில் நிகழ்ந்த (உள்ளூர் நேரம் காலை 5:53:58 UTC நேரம் மே 26 இரவு 10:53:58) நிலநடுக்கத்தில் 6 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1907-ராச்சேல் கார்சன், அமெரிக்க உயிரியலாளர் (இ.1964)

★ 1923-ஹென்றி கிசின்ஜர், நோபல் பரிசு பெற்றவர்.

★ 1956-கிசெப்பே டோர்னடோரே, இத்தாலிய திரைப்பட இயக்குநர்.

★ 1975-மைக்கேல் ஹசி, அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்

★ 1977-மகேல ஜயவர்த்தன, இலங்கை துடுப்பாட்ட வீரர்

### இறப்புக்கள்

★ 1910-ரோபர்ட் கோக், ஜேர்மனிய அறிவியலாளர் (பி.1843)

★ 1597-டொன் யுவான் தர்மபால, இலங்கை கோட்டை மன்னன்.

### சிறப்பு நாட்கள்

பொலிவியா- அன்னையர் தினம்

நைஜீரியா- சிறுவர் தினம்



★ 1964- முதலாவது இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் நினைவு தினம் (பி.1889)

# மே 18 மனிதப்படுகொலை நாள்!














இலங்கையில் தமிழனத்திற்கு எதிரான இறுதிப்போரில் ஒன்றரை இலட்சம் தமிழர்களைக் கொன்று குவித்த சிங்கள இராணுவத்தினர், முள்ளிவாய்க்காலில் கடைசி நாளில் மட்டும் 50 ஆயிரம் தமிழர்களை

**நக்கீரன்**

படுகொலை செய்தனர். இந்த இனப்படுகொலைகள் நிகழ்ந்து மூன்று வருடங்கள் முடிந்து விட்டன. மூன்றாம் வருடத்து நினைவு நாளை தமிழகம் தொடங்கி உலகம் முழுவதும் போர்க்குற்ற நாளாக கடைப்பிடித்ததுடன் தமிழீழத்தை உருவாக்க பொது வாக்கெடுப்பு நடத்து என்று வலியுறுத்தியுள்ளனர் தமிழர்கள்.

சென்னை மெரினாவில் வீரவணக்க




ஒன்று கூடலுக்கு மே 17 மற்றும் பெரியார் திராவிடக்கழகம் உள்ளிட்ட அமைப்புகள் அழைப்பு விடுத்திருந்தன. அதன்படி மிக எழுச்சியுடன் ஒன்றுகூடல் நடந்தது. மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் தலைமையில் நடந்த இந்த ஒன்றுகூடலில் பழநெடுமாறன், வைகோ, கொளத்தூர் மணி, விடுதலை இராஜேந்திரன், ம.நடராசன், காசி ஆனந்தன், அறிவுமதி, புகழேந்தி தங்கராஜ், பெ. மணியரசன், வீரசந்தானம், மருதுஉள்ளிட்ட பலரும் கலந்து கொள்ள... தமிழின உணர்வாளர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திரண்டிருந்தனர். படுகொலையுண்ட தமிழர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இலங்கை அரசு இனப்படுகொலை அரசு. அதன்மீது சர்வதேச விசாரணையை உடனே நடத்து; இந்திய அரசின் துரோகத்தை மறக்கமாட்டோம்; மன்னிக்கமாட்டோம்; உள்ளிட்ட பல முழக்கங்களை எழுப்பினர். மெழுகுவர்த்தி ஏந்தி நினைவஞ்சலி செலுத்தினர். உணர்வாளர்கள். இந்த ஒன்று கூடலில், தமிழனத்தின் மீதான தனது உணர்வுளை பதிவு செய்ய பீகாரிலிருந்து வந்து கலந்து கொண்ட லோக் ஜனசக்தி கட்சி தலைவர் ராம் விலாஸ் பஸ்வான், தமிழீழத்தில் சிங்கள அரசு நடத்தியது, திட்டமிட்ட இனப்படுகொலை. இந்த இனப்படுகொலைகளுக்காக சிங்கள அரசு மீது போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும். இலங்கை இன சிக்கலுக்கு ஒரே தீர்வு தமிழீழம்தான். அதற்கான பொது வாக்கெடுப்பை நடத்த ஐ.நா. மன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை அழுத்தமாக வலியுறுத்தினார். ஒன்று கூடலில் கலந்து கொண்ட மக்களிடம் கையெழுத்து வாங்கிய, ஒரு கோடி கையெழுத்து இயக்கத்தினரை தம் அருகில் அழைத்து தனது கையெழுத்தை பதிவு செய்தார் ராம்விலாஸ் பஸ்வான்.

முள்ளிவாய்க்காலின் துயர நாளின் நினைவேந்தல் பொதுக்கூட்டத்தை கடலூரில் நடத்தினார் தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன். இதில், அக்கட்சியை சேர்ந்த 10 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் பெரும் திரளாக திரண்டிருந்தனர். இலங்கை அரசின் தமிழின அழிப்பையும் இந்திய அரசின் துரோகத்தையும் பட்டியலிட்டு ஆவேசப்பட்ட வேல்முருகன், வெள்ளையர்கள் ஆளும் நாடுகள்கூட, இலங்கையில் நடந்திருப்பது இனப்படுகொலைதான் என்று அறிவித்து இலங்கை ஜனாதிபதிமீது போர்க்குற்ற விசாரணை நடத்து எனக்குரல் கொடுக்கிறது. ஆனால், அத்தகைய குரல் கொடுக்கவேண்டிய இந்திய அரசு, ஒரு குழுவை மட்டும் அனுப்பி வைத்து நாடகமாடுகிறது. இலங்கையோடு இந்தியாவையும் சேர்த்து போர்க்குற்ற விசாரனை நடத்த வேண்டும். தமிழீழப்பயிருக்கு நம் இயக்கத்தினர் எருவாக இருத்தல் வேண்டும் என்று உணர்ச்சி வயப்பட்டார்.

அதேபோல ம.தி.மு.க. விடுதலை சிறுத்தைகள் நாம் தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், தமிழர் எழுச்சி இயக்கம் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்கள் முள்ளி

## தமிழீழத்தை உருவாக்க பொது வாக்கெடுப்பு நடத்து!

வாய்க்கால் படுகொலையின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியை எழுச்சியுடன் நடத்தினர். அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, பிரிட்டன், பிரான்ஸ், சுவிஸ், நோர்வே உள்ளிட்ட பல நாடுகளிலும் முள்ளிவாய்க்கால் துயரத்தை தமிழீழத்தின் தேசிய துக்க நாளாகவும் போர்க்குற்ற நாளாகவும் அனுஷ்டித்தனர். இந்த நாடுகளில் நிகழ்ந்த நினைவேந்தல் ஒன்று கூடலில் இலட்சக்கணக்கான தமிழர்கள் ஒன்று திரண்டு, உலக நாடுகளே தமிழீழத்தை அங்கீகரி... ஐ.நா. சபையே பொதுவாக்கெடுப்பை நடத்து என்று ஓங்கி குரல் கொடுத்தனர். கடனடாவில் நடந்த நிகழ்வில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். கனடாவிற்கு வந்திருந்த பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் சிபெய்ன்மக்டோனா இந்த நிகழ்வில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில், முள்ளி



புலம் பெயர் பிரதேசத்தில் 2012 மே 18 நினைவேந்தல் நிகழ்வு

வாய்க்கால் ஒரு முடிவல்ல. அதுவே ஒரு முடிவிற்கான ஆரம்பம். வலியைத் தந்தவனுக்கு வலியைக் கொடுப்போம் என்ற தேசியத் தலைவரின் வீரிய சிந்தனைக்கு நேரடி வடிவம் கொடுத்த இந்த நிலத்தையே முள்ளிவாய்க்காலாக வரித்துக் கொண்டு நாம் கூடியிருக்கும் இன்றைய நாளில் நாம் அனைவரும் ஏற்றத் தாழ்வுகளின்றி ஒரு வீரசபதம் எடுக்கின்றோம். வலியைக் கொடுத் தவனுக்கு அந்த வலியைத்திருப்பித் தருவோம். எமக்காக நியாயம் கேட்கும் நாடுகளின் கரங்களை உறுதியாகப் பற்றிக் கொண்டு தமிழீழ தேசியத்தை கட்டியெழுப்ப உறுதி பூணுவோம். தமிழ்த் தேசியத்தை அழிக்க நினைப்பவர்



மரீனா கடற்கரை 2012 மே 18 நினைவேந்தல் நிகழ்வு

களை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிறுத்துவோம். போர்க்குற்றம் புரிந்த இலங்கை ஆட்சி பீடத்தை தண்டித்தே தீரவேண்டும். இனப்படுகொலை குற்றவாளிகளை கூண்டில் ஏற்றுவோம். அதுவரை ஓயமாட்டோம்; ஓயமாட்டோம். போர்க்குற்ற நாளின் மூன்றாம் ஆண்டில் எங்கள் விழுதுகளை அணைத்து... வேர்களை இணைத்து தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற சபதத்தை ஏற்கிறோம் என்று பிரகடனம் செய்தனர் புலம் பெயர் தமிழர்கள்.

கனடாவைப்போல லண்டனில் நடந்த



மரீனா கடற்கரை 2012 மே 18 நினைவேந்தல் நிகழ்வு

நிகழ்விலும் அனைத்து அரசியல் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். இலங்கை அரசுக்கு எதிராக போக்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணையை தொடங்குவதற்கான முயற்சியை எடுத்தல். ஐ.நா. மன்றத்தில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்த வலியுறுத்தல், இராஜபக்சவின் பிரிட்டன் வருகையை தடுத்து நிறுத்தல், அடுத்தவருடம் இலங்கையில் நடக்கவிருக்கும் கொமன்வெல்த் நாடுகளின் மாநாட்டை வேறு நாட்டிற்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை தீவிரப்படுத்துதல் ஆகியவை குறித்து பேசினர். இந்த நிகழ்வின் போது பல்வேறு நாடுகளின் அமைச்சர்களும் உறுப்பினர்களும் அனுப்பிய செய்தியினை ஒலிபரப்பினர். பிரிட்டனின் ஆளும் கட்சியான கன்சர்வேட்டிக் கட்சி உறுப்பினர் கிரான் சேப்ஸ், இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதனை பிரித்தானிய அரசு ஏற்றுக்கொள்ள வலியுறுத்துவேன். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தா விட்டால், இலங்கையில் நடக்கவிருக்கும் கொமன்வெல்த் நாடுகளின் மாநாட்டை பிரிட்டன் புறக்கணிக்கும் என்று கடுமையாக எச்சரித்தார்.

முள்ளிவாய்க்கால் துயரத்தின் மூன்றாம் ஆண்டில் தமிழகம் தொடங்கி அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் முழுவதும் நினைவேந்தல் நிகழ்ச்சிகளில் தமிழீழம் உருவாக தமிழர்கள் சபதம் எடுத்திருப்பது சர்வதேச நாடுகளால் உற்றுக் கவனிக்கப் பட்டு வருகிறது.

# அரசியல் கைதிகள் தொடர்பில்

# தீர்க்கமான முடிவு எடுக்கப்படவேண்டும்

## அல்லது போராட்டம் என்கிறார் சிவசக்தி எம்.பி.

(கொழும்பு)

**அரசாங்கம் பலமுறை எங்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. ஆனால், இதுவரை எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. அரசாங்கம் கொடுத்துள்ள ஒருமாதகால அவகாசத்திற்குள் தமிழ் அரசியல் கைதிகளுக்குத் தெளிவான முடிவு கிட்டவில்லையெனில் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நடைபெற்ற அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு வந்திருக்கும் மக்கள்தொகை காணாது. எமது குரலைச் சர்வதேச மட்டத்தில் எதிரொலிக்கச் செய்வதற்கும் நாம் இதனை விட பலமடங்கு அணிதிரள வேண்டும். எதிர்காலத்தில் அதிகளவில் மக்கள் பங்கேற்பர் என்று நான் நம்புகிறேன். இந்த அரசாங்கம் அரசியல் கைதிகளின் விடயத்தில்தான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றும் என்று நான் நம்பவில்லை.

இனியும் இலங்கை அரசாங்கம் எம்மை ஏமாற்ற முடியாது. விரைவில் ஒரு தீர்வை முன்வைக்க வேண்டிய நிலைக்கு அரசாங்கம் வரவேண்டும்.

சிறைக்கைதிகள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ் அரசியல் கைதிகள் குடும்பத்தினரின் கல்வி, வாழ்வாதாரம், பொருளாதாரம் ஆகிய அனைத்துமே இன்று பாதிப்படைந்துள்ளது. இன்று நாட்டில் சமாதானமும் அமைதியும் நிலவுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆனால், ஆயிரக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் எதுவிதக் காரணமும் தெரியாமல் சிறைகளில் வாடுகின்றனர்.

பொதுமக்களும் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களில் பெருமளவில் பங்குபற்ற வேண்டும். இன்று இங்கு வந்திருப்போரின் எண்ணிக்கை போதுமானதல்ல. ஆயுதப் போராட்டத்திலும் சரி அகிம்சை ரீதியான போராட்டங்களிலும் சரி நம்மில் பெரும்பான்மையானோர் பார்வையாளர்களாகவே இருக்கின்றோம்.

அந்த நிலை மாறவேண்டும். எமது மக்களில் பெரும்பகுதியினர் போராட்டங்களில் பங்காளிகளாக வேண்டும். அப்பொழுது தான் எமது உரிமைக்குரல் சர்வதேசத்தின் காதுகளில் ஓங்கி ஒலிக்கும். எமது போராட்டமும் வெற்றி பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-266)


# தமிழரசுக் கட்சியின் மாநாட்டு மண்டபம் இடமாற்றம்

(கொழும்பு)

இலங்கை தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை ஊறணியில் அமைந்துள்ள அமெரிக்கன் மிசன் மண்டபத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளதாக கட்சியின் மாநாட்டு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

மாநாடு நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மட்டு.அரசடியில் அமைந்துள்ள தேவநாயகம் மண்டபம், நேற்று முன்தினம் தீப்பிடித்ததைத் தொடர்ந்து மாநாட்டு மண்டபத்தை இடமாற்றியுள்ளதாகவும் மாநாட்டு நிகழ்சிகள் திட்டமிட்டபடி எதுவித மாற்றமுமின்றி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களிலும் இருந்து கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் தற்போது மட்டக்களப்பிற்கு வருகை தந்துள்ளனர். (அ-2)



அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பௌர்ணமி தினவிழாவினை அண்மையில் நடத்தினர். இந்நிகழ்வின்போது சிவஸ்ரீமாணிக்கராச சர்மாவிடமிருந்து மன்ற தனாதிகாரி க.க.சிவபாலன் திணைக்கள வெளியீடுகளை பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

# கியூபா இடமாற்றம் குறித்து மௌனம் சாதிக்கும் தமரா

**கியூபாவிற்கான இடமாற்ற உத்தரவு தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான ஜெனீவா கிளையின் இலங்கை நிரந்தரப் பிரதிநிதி தமரா குணநாயகம் இதுவரையில் எவ்வித பதிலையும் அளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.**

இடமாற்ற உத்தரவை நிராகரிப்பதாகவோ அல்லது ஏற்றுக் கொள்வதாகவோ தமரா குணநாயகம் இன்னமும் வெளிவிவகார அமைச்சிற்கு அறிவிக்கவில்லை. தமரா குணநாயகத்தின் அண்மைய சுயவிரபக் கோவை ஒன்றை சமர்ப்பிக்குமாறு வெளிவிவகார அமைச்சு கோரியுள்ளது.

வெளிவிவகார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை தமராவிற்கு காணப்படுவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் வெளிவிவகார அமைச்சு எடுத்த தீர்மானத்தில் மாற்றம் கிடையாது எனவும் அதன்படி நடவடிக்கைகள் எடுக்கப்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி இந்த இடமாற்ற உத்தரவினை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இதனை ஓர் தண்டனை இடமாற்றமாக கருதுவதாகவும் தமரா குணநாயகம் வெளிவிவகார அமைச்சிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சந்தேக நபர் கைதானார்

(கரவெட்டி)

அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடி பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக் கோஷ்டி மோதல் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.30 மணிக்கு அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடி பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பருத்தித்துறை பொலிஸார் குறித்த நபரை அவரது வீட்டில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

ஏனைய சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இச்சம்பவத்தில் படுகாயமடைந்த அல்வாய் நாவலடி பகுதியை சேர்ந்த சுந்தரமூர்த்தி ரதீஸ்குமார் (வயது 34) என்ற இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (அ-3-24)

# வெற்றிகளை மறந்துபோகும் அளவிற்கு நாட்டில் பொருளாதார நெருக்கடி

## ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

வெற்றிகள் மறந்து போகும் அளவிற்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாளைய தினத்திற்காக இன்று எந்தத் திட்டத்தையும் வகுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. வீடுகளில் பொருளாதாரப் போர் வெடித்துள்ளது.

நாட்டில் பணத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ரூபாவின் பெறுமதி பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. வங்கிகளில் பணமில்லை என்று சொல்ல முடியாத அளவிற்கு பொருளாதார பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒரு ரூபாவிற்கு வாங்கிய பொருளை இன்று கொள்வனவு செய்ய முடியுமா? வேண்டாம் சில மாதங்களுக்கு முன்னர் வாங்கிய பொருட்களை தற்போது கொள்வனவு செய்ய முடியுமா? ஒரு இறாத்தல் பாண் வாங்கி உட்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என ஜே.வி.பியின் தலைவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சைவசமய கற்றல் கையேடு வெளியீட்டு விழா நாளை

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய சைவசமய பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி. இ.இராமலிங்கம் தயாரித்து வெளியிடும் தரம் 11 மாணவர்களுக்கான சைவசமய கற்றல் கையேடு வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், தென்மராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-29)

# பல்கலை. மாணவன் தாக்குதலை நேரில் கண்ட சாட்சியங்கள் இல்லை

## விசாரணைகள் தொடர்கின்றன - யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் ஆட்கடத்தல், கொள்ளை, போதைப்பொருள் வியாபாரம் போன்ற பாரிய குற்றங்களை தடுப்பதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குகனேசன் தெரிவித்தார்.**

அவருடைய அலுவலகத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச்சுற்றிவளைப்புக்களின் மூலம் சென்றவாரம் மட்டும் நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 27 பேரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 8 பேரும் சுற்றுச்சூழலுக்கு மாசடைதலை ஏற்படுத்திய 8 பேரும் மாடுகளினை கடத்திய 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சுற்றிவளைப்புக்களின் மூலம் குற்றச் செயல்களில் ஈடுபடும் அனைத்து குற்றவாளிகளும் பொலிஸாரால் கைது செய்யப்படுவர்.

இந்நடவடிக்கை மூலமாக கொள்ளைச் சம்பவங்கள் இவ்வருடம் குறைவடைந்துள்ளன. தற்போது யாழில் திடீர் கடத்தல் சம்பவங்கள் வெளிப்பட்டு உள்ளன. இவற்றில் மானிப்பாயினை சேர்ந்த சிறுவன் ஒருவன் கடத்தப்பட்டு முஸ்லிமாக மாற்றப்பட்ட விவகாரத்தை எடுத்துக் கொள்ளலாம்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை மட்டக்களப்பு பொலிஸாரின் உதவியுடன் விரைவில் கைது செய்வோம்.

மானிப்பாயில் அண்மையில் நடைபெற்ற இரு கொள்ளைச் சம்பவங்களை விசாரிக்க 2 சிவில் பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. மேலும் பல்கலைக்கழக மாணவனை தாக்கியவர்களின் கைது தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு மழுப்பான பதிலளித்த யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா குறித்த சம்பவம் தொடர்பாக தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் எனினும் குறித்த சம்பவத்தினை நேரில்கண்ட சாட்சியங்கள் எதுவும் இல்லை எனவும் தாக்குதலுக்கு உள்ளான பல்கலைக்கழக மாணவனுக்கும் தன்னை தாக்கியவர்களினை இனங்காண முடியாமல் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-4-6)

## வலுவூட்டல் நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினரால் தமது நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான வலுவூட்டல் நிகழ்வு எதிர்வரும் 30 திகதி புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு சபையின் தவிசாளர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வளவாளராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்ப உதவிக்கல்வி பணிப்பாளர் தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களது கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-3-29)

## விபத்து சம்பவத்துடன் தொடர்புடைய நபருக்கு 2 இலட்சம் ரூபா ஆட்பிணை

(கரவெட்டி)

வடமராட்சி குஞ்சர் கடை சந்தியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்த கிராம அலுவலர் நவரட்ணம் ஸ்ரீஸ்குமார் (வயது 37) என்பவருடைய வழக்குடன் தொடர்புடைய நபர் ஒருவருக்கு 2 இலட்சம் ரூபா ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

இவ்விபத்து சம்பவத்தில் கிராம அலுவலர் உயிரிழந்ததுடன் இவருடன் மோதி விபத்துக்குள்ளான இரு இளைஞர்கள் பலத்த காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அதில் ஒரு இளைஞரை நெல்லியடி பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதவான் குறித்த இளைஞரை 2 இலட்சம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததுடன் எதிர்வரும் ஜூலை மாதம் 27 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். (அ-3-24)

## திருடிய பெண்களுக்கு ஒருவருட சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

வீட்டுக்குள் புகுந்து நகைகளை திருடிய பெண்களுக்கு யாழ். நீதிமன்றம் ஐந்து வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கொழும்புத்துறையிலுள்ள வீடொன்றில் யாருமில்லாத நேரம் பார்த்து வீட்டுக்குள் புகுந்து 3 இலட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியுடைய நகைகளினை மன்னாரினை சேர்ந்த இரு பெண்கள் திருடியுள்ளனர்.

குறித்த இருவரும் பொலிஸ் விசாரணைகளின் மூலம் 12.03.2012 அன்று பிடிப்பட்டனர். குறித்த இருவரும் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் வழக்கு யாழ். நீதவான் மா.கணேசராசா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ் வழக்கு விசாரணைகளின் போது தாம் நகை திருடிய குற்றத்தினை ஒப்புக் கொண்டனர். இந்நிலையில் குறித்த இரு திருட்டுப் பெண்களுக்கும் 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

திருடப்பட்ட நகைகள் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ-4)

## தென்கிழக்கு பல்கலையில் சர்வதேச ஆய்வரங்கு

(கொழும்பு)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் முகாமைத்துவபீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2 ஆவது சர்வதேச ஆய்வரங்கு ஆரம்பமானது. இவ்வாய்வரங்கு நேற்று முன்தினம் ஆரம்பமானது. எதிர்வரும் 27 ஆம் திகதி வரை மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ள இந்த ஆய்வரங்கில் பிராந்தியத்தின் வர்த்தக முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பாக பல்வேறு நாடுகளையும் சேர்ந்த ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் தென் கிழக்கு பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயில், ஆய்வரங்கின் இணைப்பாளர் ஏ.பி.ஜஃபர், கொரிய பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் உற்பத்திக்கான பொறுப்பாளர் கலாநிதி ஈகோச்சூ, பதிவாளர் எஸ்.சத்தார் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ-2)

## மாநகர சபையின் மே மாதக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் நடப்பு ஆண்டுக்கான ஐந்தாவது (மே மாத) மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி வியா ழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி பற்குணராசா தலைமையில் நடை பெறவுள்ளதாக யாழ். மாநகர சபை செயலாளர் திருமதி ரு. சத்தியானந்தன் அறிவித்துள்ளார். (அ-7)

## போதைப்பொருள் பாவனையை ஒழிப்போம்; ஆக்கத்திறன் போட்டி

மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் போதைப்பொருள் பாவனையை ஒழிப்போம் என்ற கருப்பொருளுக்கமைவாக இவ்வாண்டில் கல்வியமைச்சினால் அகில இலங்கை ரீதியாக நாடக ஆக்கத் திறன் போட்டிகள் நடைபெறவுள்ளன. இப் போட்டிக்காக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியிலிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுவதாகவும் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் பங்குகொள்வோர் எதிர் வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாக பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துள்ளார்.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள போட்டி தொடர்பான சுற்று நிருபத்தில் பார்வையிடுமாறும் அல்லது துணுக்காய் வலயக் கல்வி அலுவலக விளம்பர பலகையில் பார்வையிடலாம் எனவும் அறிவித்துள்ளார். (அ-75)



வன்னியில் கடந்த கால யுத்தத்தில் உயிர் நீத்த பொதுமக்களுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு அண்மையில் வலிகாமம் வடக்கு பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தெல்லிப்பழை உப அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்.ஜெயகாந்தன் ஈகைச்சுடரேற்றுவதையும் அஞ்சலி நிகழ்வு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் மஹோற்சவம் கடந்த 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதாக தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது.

அத்துடன் ஜூன் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இவ்வாலயத்தின் முருகப்பெருமானின் சித்திரத் தேர் வெள்ளோட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# காசநோய் தடுப்புச்சங்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

காசநோய் தடுப்புச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலந்துரையாடல் சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி மணிவாசகன் தலைமையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் நடைபெறவுள்ளது. இச்சங்கத்தில் பழைய உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்வதுடன் புதிதாக இணைய விரும்புவர்களும் காசநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்களும் இதில் அங்கத்தவர்களாக தங்கள் பெயர்களை பதிவு செய்யலாம் என யாழ்.மார்பு நோய் சிகிச்சை நிலைய காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.யமுனாநந்தா அறிவித்துள்ளார். (அ-7)


## இணுவில் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழா



### இரண்டாம் திருவிழா (27.05.2012)

**அடியார் குறை தீர்த்திடு**

பரனுக்கு குருவாகி பிரமனை சிறைகொண்ட குமரா!
குறமாதை கரம் பற்றி குலத்தோஷம் நீத்தவா!
மரமாக வந்த சூரன் வதமாகி சேவல் மயிலாக
வரமாகக் கொடுத்த இணுவையூரா! பதிவாசல் வரவாகி
சரணமே என்று அழைத்து கரம் கூப்பு வார் முன்வந்து
அரனாகி அருள் ஈர்ந்து அடியார் குறை தீர்த்திடு!

சுன்னாகம் வரன்

(சி/081)

2ஆம் திருவிழா உபயகாரர்


# புலிகள் பயங்கரவாதிகள்; ஏனையவர்கள் போன்று புனர்வாழ்வளிக்க முடியாதாம்

## பொன்சேகா கூறுகின்றார்

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கான தீர்வை எழுத்து மூலம் வைத்துக் கொண்டு சர்வதேசத்தையும் மக்களையும் ஏமாற்றக் கூடாது எனவும் நிதானமாக சிந்தித்து நடைமுறைக்கு சாத்தியமான தீர்வை கட்டாயமாக முன்வைக்க வேண்டும் எனவும் முன்னாள் இரா்ணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் வெளியாகும் தினசரி பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் மிதமிஞ்சிய இராணுவத்தினர் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும். யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் வடக்கை சிவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

புலிகள் பயங்கரவாதிகள். அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கின்றபோது ஏனைய பிரிவினருக்கு போன்று புனர்வாழ்வு அளிக்க முடியாது.

நான் தமிழ் மக்களுக்கு எதிரானவன் அல்ல. இரு இனங்களுக்கும் இடையில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதுவே எனது பாரிய எதிர்ப்பார்ப்பாகும். எனது பார்வையில் சிறுபான்மை இன மக்கள் என்றொரு பிரிவினர் நாட்டில் இல்லை. சிங்கள, தமிழ்,முஸ்லிம் மக்கள் இந்த நாட்டில் சமத்துவமாக வாழக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும். அதுவே எனது எதிர்பார்ப்பாகும்.

அதனை நிறைவேற்றும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு புரையோடிப் போயிருக்கின்ற இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும். அத்தீர்வு எழுத்து வடிவில் இல்லாமல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதன்மூலம் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு வழங்கப்படுகின்ற தீர்வு ஏட்டில் மட்டுமே இருக்கக்கூடாது. தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்கள் மத்தியிலும் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் தீர்வு அமைய வேண்டும்.

இனங்களுக்கு இடையில் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கட்டியெழுப்ப வேண்டும். அது முக்கியமானதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# வாகன விபத்துச்சம்பவத்தில் குடும்பஸ்தர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

டிப்பர் வாகனமும் கன்ரர் வாகனமும் மோதியதில் இரு சாரதிகளில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் மதியம் ஒரு மணியளவில் முருகண்டிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான டிப்பர் வாகனத்தை செலுத்தி வந்த ஜோல் ஞானகாந்த் (வயது 41) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

இருபாலையைச் சேர்ந்த கன்ரர் சாரதியான இரு பிள்ளைகளின் தந்தையான ஜேம்ஸ் ஜெயதாஸ் (வயது 44) என்னும் குடும்பஸ்தரும் சிறுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னால் சென்று கொண்டிருந்த கன்ரர் வாகனம் திடீரென்று நின்றதனால் பின்னால் வந்த டிப்பர் வாகனம் கன்ரரோடு மோதியதாலேயே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2-4)

# கிளிநொச்சி மாவட்டத்திற்கு மின்விநியோக நடவடிக்கை



கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களுக்கும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலங்கை மின்சார சபையினரால் மின் விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

அந்த வகையில் பல வருடங்களுக்கு பின்னர் கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்திற்கு அண்மையில் மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

முறிகண்டியிலிருந்து பூநகரி வேரவில் வரைக்குமான 100 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மின் விநியோக திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக அக்கராயன் வரைக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து ஏனைய பிரதேசங்களுக்கான மின்விநியோக செயற்பாடுகள் படிப்படியாக இடம்பெறும் என இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் குணசீலன் தெரிவித்துள்ளார். இதேவேளை, வட்டக்கச்சி பிரதேசத்திற்கான மின் விநியோக நடவடிக்கையும் இடம்பெற்றுள்ளது. 27 மில்லியன் ரூபா செலவில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (அ-9)

# கனிஷ்ட ஊழியர்களை தரமுயர்த்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை

(மல்லாவி)

வடக்கு மாகாண சேவையின் கனிஷ்ட ஊழியர்களை மாகாண முகாமை உதவியாளர் சேவையின் தரம் III இற்கு உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2012 ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ளதாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் இ.தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

இப் பரீட்சை தொடர்பான விபரங்களையும் விண்ணபப்படிவங்களின் மாதிரியையும் வடக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களிற்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதி செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,வடக்கு மாகாணம், 10 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, புத்தூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2-15)

# பெற்றோல், அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வை கண்டித்து நாடு தழுவிய ரீதியில் போராட்டம் நடத்தப்படும்



வரலாறு காணாத அளவில் மிகக் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ள பெற்றோல் விலை உயர்வைக் கண்டித்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கண்டித்தும் எதிர்வரும் 31 ஆம் திகதி நாடு தழுவிய அளவில் பாரத்பந்த் நடத்தப்படும் என்று தேசிய ஜனநாயகக் கூட்டணி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக எதிர்க்கட்சி கூட்டணிகளை சேர்ந்த அனைத்து கட்சிகளுடனும் ஆலோசிக்கப்பட்டதாக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அமைப்பாளரும் ஐக்கிய ஜனதா தளத் தலைவருமான சரத் யாதவ் தெரிவித்துள்ளார்.

இந்த விலை உயர்வால் நடுத்தர மக்கள் பெரும் அதிர்ச்சிக் கடலில் மூழ்கிப்போய் இருக்கின்றார்கள். எரிகிற கொள்ளியில் எண்ணெய் ஊற்றுவது போல டீசல் விலையையும் காஸ் விலையையும் மற்றும் மண்ணெண்ணெய் விலையையும் கூட உயர்த்தப் போவதாகவும் அதுபற்றி முடிபெடுக்க மத்திய குழு கூடப்போவதாகவும் டில்லியில் ஒரு அதிகாரி கூறி மக்கள் வயிற்றில் புளியை கரைத்திருக்கின்றார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடங்கி ஏனைய அனைத்து முதல்வர்களும் எதிர்க்கட்சி தலைவர்களும் தங்களது கண்டனக் குரல்களை பதிவு செய்திருக்கின்றார்கள். இந்த பாவம் மத்திய அரசை சும்மா விடாது. மக்கள் விடும் கண்ணீர் மத்திய அரசுக்கு வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்றும் தலைவர்கள் கூறியுள்ளனர்.

பெற்றோல் விலை உயர்வை பா.ஜ.க. அடங்கிய தேசிய ஜனநாயக கூட்டணியும் கண்டித்துள்ளது. இதேவேளை பாராளுமன்ற கூட்டத்தொடர் நடந்தபோது பெற்றோல் விலை உயர்வு பற்றி ஏன் அறிவிக்கவில்லை என்று கேள்வி எழுப்பிய அவர் கூட்டத்தொடர் முடிந்த மறுநாளே எண்ணெய் கம்பனிகள் விலையை உயர்த்த வேண்டிய அவசியம் என்ன? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

ஆனால் உண்மை என்னவென்றால் அரசு விரும்பும் போதுதான் விலை உயர்த்தப்படுகின்றது என்று உண்மையை போட்டு உடைத்தார் சரத்யாதவ்.

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த இந்த அரசு முற்றிலுமாக தவறிவிட்டது என்றும் சரத்யாதவ் சாடினார்.

இதேவேளை அன்னா ஹசாரே நேற்று முன்தினம் நாசிக்கில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியதாவது,

பெற்றோல் விலை உயர்வை கண்டித்து பா.ஜ.க மற்றும் இடதுசாரி கட்சிகள் விடுத்துள்ள பாரத் பந்த்திற்கு என் ஆதரவாளர்கள் முழு ஆதரவு தருவர்.

பெற்றோல் விலையை உயர்த்தி பொது மக்களுக்கு சுமையை ஏற்றியுள்ளது.

ஜன்லோக்பால் சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றாவிட்டால் டில்லியில் சாகும் வரை உண்ணாவிரதம் போராட்டம் நடத்துவேன். நான் நல்ல உடல் தகுதியுடன் உள்ளேன். ஊழலுக்கு எதிராக நடத்தப்படும் போராட்டங்களில் இளைஞர்கள் அதிகளவில் பங்கேற்க வேண்டும்.

ஜப்பான், வியட்நாம், இந்தோனேசியா போன்ற நாடுகளில் இளைஞர்களால் புரட்சிகர மாற்றங்கள் நடந்துள்ளன என அவர் பேசினார்.

(அ-2)



பெற்றோல் விலை உயர்வை கண்டித்து பா.ஜ.க கட்சியினர் சோழிங்க நல்லூர் ராஜீவ்காந்தி வீதியில் போராட்டம் நடத்துவதைப் படத்தில் காணலாம்.

## ஐரோப்பிய நாடுகளுக்கு பயணிக்கவுள்ள ஹிலாரி

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அடுத்தவாரம் ஐரோப்பா நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இப்பயணத்தில் ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவுடன் இரு தரப்பு ஒப்பந்தம் குறித்து முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிகிறது. ஹிலாரி எதிர்வரும் 31இல் வோஷிங்டனிலிருந்து புறப்படுகிறார். அப்போது அவர் இருதரப்பு குறித்து டென்மார்க் மூத்த அதிகாரிகளுடன் முக்கிய ஆலோசனை நடத்துகிறார்.

இப்பயணத்தில் பசுமைத் தொழில்நுட்பம், பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்போடு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது. இப்பயணத்தின்போது அவர் டென்மார்க், நோர்வே, சுவீடன், ஆர்மேனியா, ஜோர்ஜியா, அஜர்பையான், துருக்கி ஆகிய நாடுகளுக்கு அவர் பயணம் மேற்கொள்கிறார். (அ-2)

## எகிப்து தேர்தல் முடிபுகளால் சிக்கல்நிலை; மறுதேர்தல் ஜூன் 16,17 இல் இடம்பெறும்

(கெய்ரோ)

எகிப்து நாட்டில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் முடிபுகள் அடுத்த வாரம் அறிவிக்கப் படவுள்ளன.

**மக்கள் புரட்சி**

எகிப்து நாட்டை கடந்த 30 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த ஹோஸ்னி முபாரக்கை பதவி விலகக்கோரி மக்கள் தொடர்ந்து போராடியதால் கடந்த ஆண்டு அவர் பதவி விலகினார். இதைத் தொடர்ந்து அங்கு கடந்த 24, 25 ஆம் திகதிகளில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடந்தது.

இத்தேர்தலில் 13 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தேர்தல் நியாயமாக நடப்பதை பார்வையிட 350 நீதிபதிகளும் ஆயிரத்து 500 பார்வையாளர்களும் பணியமர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் மட்டுமல்லாது 53 மனிதவுரிமை அமைப்புக்கள் சார்பில் 9 ஆயிரத்து 457 பார்வையாளர்கள் தேர்தலை கண்காணித்தனர். தேர்தல் பிரசாரம், வாக்குப் பதிவு, வாக்கு எண்ணிக்கை ஆகியவற்றை 14 நாடுகளைச் சேர்ந்த சர்வதேச பார்வையாளர்கள் கண்காணிக்கின்றனர். தேர்தல் முடிந்ததும் வாக்குகள் எண்ணும் பணி தொடங்கியது. தங்கள் கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளதாக முஸ்லிம் சகோதரத் துவ கட்சி அறிவித்துள்ளது.

இந்தக் கட்சியை சேர்ந்த தொண்டர்கள் கெய்ரோ நகர வீதிகளில் கோஷமிட்டும் கொடிகளை அசைத்தபடியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்தக் கட்சியின் சார்பில் முகமது முர்சி போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

முகமது முர்சிக்கு 26 சதவீதவாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. முன்னாள் பிரதமரான அகமது ஷபிக் 24 சதவீத வாக்குகளை பெற்றுள்ளார்.

எனவே அடுத்த வாரம் மீண்டும் மறு வாக்கெடுப்பு எண்ணிக்கை நடத்தப்பட்டு தேர்தல் முடிவுகள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளன. எனவே இந்த தேர்த லில் எந்த வேட்பாளரும் அதிகளவாக கிடைக்காவிட்டால் அடுத்த மாதம் 16 ,17ஆம் திகதிகளில் மறு தேர்தல் நடத்தப்படும். (அ-2)

## போதைப்பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு தடை விதிக்கவேண்டும்

### பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்து



கேரள போதைப்பாக்குகள் மற்றும் பிற புகையிலை பொருட்கள் உற்பத்தி செய்யவும் விற்பனை செய்யவும் தடைவிதித்துள்ளது. போதைப்பொருட்களில் இருந்து மக்களை காக்கும் நோக்குடன் கேரள அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கை பாராட்டத்தக்கது.

தமிழ் நாட்டில் போதைப்பாக்குகள் மற்றும் பிற புகையிலை பொருட்களின் விற்பனை அதிகரித்திருப்பதாக சென்னை அடையாறில் உள்ள புற்றுநோய் மருத்துவமனையின் புகையிலை கட்டுப்பாட்டு மையம் சார்பில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுவையில் ஆண்களை விட பெண்கள் அதிக அளவில் மெல்லக்கூடிய புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர் என்ற அதிர்ச்சியூட்டும் உண்மை உலக வயது வந்தோர் புகையிலைப் பயன்பாட்டு ஆய்வில் தெரிய வந்துள்ளது. இந்தியாவில் 20.6 கோடி பேர் மெல்லக்கூடிய புகையிலை பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளதாகவும் அவர்களில் 40 வீதத்தினர் உயிரிழப்பதாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதியிலிருந்து 400 மீற்றர் சுற்றளவுக்கு பீடி , சிகரெட் போதைப்பாக்கு போன்ற புகையிலை பொருட்களை விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் தமிழ்நாட்டில் இந்தத் தடை முழுமையாக கடைப்பிடிக்கப்படா ததால் பாடசாலை, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் புகையிலை பொருட்களின் பழக்கத்திற்கு ஆளாவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என பா.ம.க.நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

## போப்பின் ஆவணங்களைத் திருடி வெளியிட்டமையால் பணியாளர் கைது

போப் ஆண்டவர் 16ஆவது பெனடிக்கின் தலைமைப் பணியாளர் பவுலோ கேபிரியல் என்பவர் வாடிகன் நகரத்தில் போப்பாண்டவரின் அரண்மனையில் தங்கியுள்ளார். இவர் அவரது நம்பிக்கைக்கு பாத்திரமானவராகத் திகழ்ந்தார்.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் வாடிகன் அரண்மனையில் இருந்த போப் ஆண்டவரின் கடிதங்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் இத்தாலிப் பத்திரிகைகளில் வெளியானது. இது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த ஆவணங்களைத் திருடி வெளியிட்டது யார் என்பதை அறிய கார்டினல்கள் தலைமையில் ஒரு விசாரணைக்குழுவை போப் ஆண்டவர் பெனடிக்ட் அமைத்திருந்தார். அவர்கள் போப் ஆண்டவருக்கு மிகவும் நெருக்கமானவர்களிடம் விசாரணை நடத்தினார்கள்.

அப்போது போப் ஆண்டவரின் தலைமைப் பணியாளர் பவுலோ கேப்ரியல் அவற்றைத்திருடி வெளியிட்டது தெரியவந்தது. எனவே இதுகுறித்து பொலிஸில் புகார் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அவரைப் பொலிஸார் கைது செய்தனர். இதில் வேறு யார் யாருக்குத் தொடர்புள்ளது என்பது குறித்தும் விசாரணை நடத்துகிறது. (அ-2)

அறிவற்ற சினேகிதனிடம் சேர்வதைவிட புத்திசாலியான விரோதியை அடைவதே மேல்
-ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அனோமா! சரத்திடம் சொல்லுங்கள் நாங்கள் முரண்பட்டால் புலி வந்துவிடும் என்று

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இருக்கக் கூடிய பலம் பலவீனம் பற்றிய ஆய்வுகள் தமிழ்த் தரப்புக்கு அவசியமானதாக இருந்தாலும் அது பற்றி நாம் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை.

இதுதான் தமிழ்த்தரப்பில் இருக்கக் கூடிய மிகப் பெரிய பலவீனம்.

தன்னை எதிர்க்கக் கூடியவர்கள் அல்லது தனக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கக் கூடியவர்களை, இனங்கண்டு அவர்களை தன்னுடையவர்களாக மாற்றி விடக்கூடிய பலம் ஜனாதிபதியிடம் உண்டு.

இதற்கு வாசுதேவ நாணயக்கார, டி.யு. குணசேகர, திஸ்ஸ விதாரண, விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் நல்ல உதாரணங்கள்.

ஜனாதிபதியின் ஆலோசகர் என்ற அடிப்படையில் வாசுதேவ நாணயக்கார போன்றவர்களைத் தன் பக்கம் இழுத்துக் கொண்ட ஜனாதிபதி, கூடவே அமைச்சுப் பதவிகளை வழங்கியும் சிலரைத் தன் வசப்படுத்தினார்.

இதுமட்டுமல்ல. தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கூட, ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்தான்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ரணிலை இறக்குவதற்கு அந்தக் கட்சிக்குள் இருந்த முக்கியமானவர்கள் முயற்சி செய்த போதிலும், அந்த முயற்சியில் இருந்து ரணிலைக் காப்பாற்றிய பெரும் பங்கு ஜனாதிபதி மகிந்தவுக்கு உண்டு.

இதனால்தான் எப்போது அழைத்தாலும் ரணில் அலரி மாளிகைக்குச் செல்ல மறுப்பதில்லை.

இதுபோல விமல் வீரவன்சவை ஜே.வி.பியில் இருந்து பிரித்தெடுத்தமை, சம்பிக்க ரணவக்கவுக்கு அமைச்சுப் பொறுப்புக் கொடுத்தமை என எல்லாம் இதன் பாற்பட்டதுதான்.

இது இவ்வாறு இருக்க அமெரிக்காவுக்கு எதிராகக் கண்டபாட்டில் கதைத்த விமல் வீரவன்சவினதும் சம்பிக்கவினதும் வாயை அடக்கி உஷ்! இனிமேல் கதைக்கக்கூடாது என்று கட்டளையிட்டதும் ஜனாதிபதிதான்.

இந்தக் கட்டளைக்குப்பின் மேற்கூறிய இருவரும் நா காப்பதில் மிகவும் கவனமாக இருக்கின்றனர்.

இதுதவிர, இந்தியாவை அடக்க சீனாவுடன் நட்புக்கொண்டது, இலங்கைக்குள் சீன ஊடுருவலுக்கு இடமளித்தமை என அனைத்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பலம் என்று கூறினால் அது மிகையன்று.

இவ்வாறான அவரின் தனிப்பாதையில் தான், சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கு முன்னதாக சரத் பொன்சேகாவின் மனைவி அனோமாவை அழைத்து ஜனாதிபதி மகிந்த கதைத்துள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுவிப்பதற்கு முன்னர் அனோமாவை ஜனாதிபதி சந்தித்தமை மிகப்பெரிய ராஜதந்திரம் என்றே கூறவேண்டும்.

அமெரிக்காவின் அழுத்தத்தால் பொன்சேகா விடுவிக்கப்பட்டிருந்தாலும்,

அனோமாவிடம் ஜனாதிபதி என்ன கூறியிருப்பார்.

அனோமா! நாங்கள் நெருங்கிய குடும்ப நண்பர்கள். சரத்திடம் சொல்லுங்கள். உடம்பை கவனிக்குமாறு. சரத் விரும்பினால் எந்த நேரத்திலும் என் அரசில் அவருக்கு உயர் பதவி வழங்க முடியும். நாங்கள் சிங்க(ள) இனம். எங்களுக்குள் பிரிவு ஏற்பட்டால் புலி வந்துவிடும்.

ஆகையால் நாங்கள் என்றும் நட்போடு இருப்போம். இப்படித்தான் – இதைத்தான் ஜனாதிபதி சொல்லியிருப்பார். இல்லையா?

# இலங்கை 2015ஆம் ஆண்டு விண்ணுக்கு செயற்கை கோள் அனுப்பும்

## – சுப்ரீம் சற் நிறுவனம் தெரிவிப்பு

இலங்கை தனது முதலாவது செயற்கைக்கோளினை 2015ஆம் ஆண்டளவில் விண்வெளி நோக்கி அனுப்புவதற்கு சீனா உதவவுள்ளது. இத்திட்டத்துக்காக இலங்கை முதலீட்டு சபையுடன் 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான உடன்பாடொன்று எட்டப்பட்டுள்ளதாக சுப்ரீம் சற் நிறுவனம் தெரிவித்தது.

இச் செயற்கைக் கோளை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல் மற்றும் அதனை விண்வெளிக்கு செலுத்துதல் போன்ற செயற்பாடுகளுக்காக சுப்ரீம் சற் நிறுவனமானது சீன அரசுக்கு சொந்தமான China Great Wall Industry Corporation நிறுவனத்துடன் உடன்பாடொன்றை எட்டியுள்ளது.

2015 இல் இலங்கையானது விண்வெளிச் சுற்றுப்பாதையில் தனது முதலாவது தொலைத்தொடர்பு செயற்கைக் கோளினை உலா வரவிடும் என நம்பப்படுகிறது.

நாங்கள் ஏற்கெனவே சீன நிறுவனத்துடன் இணைந்து இரு செயற்கைக் கோள்களை விண்வெளிச் சுற்றுப் பாதைக்கு அனுப்பி வைத்துள்ளோம். இந்நிலையில் 2015இல் இலங்கையினுடைய முதலாவது செயற்கைக் கோளை விண்நோக்கி அனுப்புவோம் என நம்புகின்றோம் என சுப்ரீம் சற் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

செயற்கைக் கோள்களை வழங்குதல், அவற்றை விண்நோக்கி அனுப்புதல் மற்றும் அனைத்துலக விண்வெளி சார் ஒத்துழைப்பை வழங்குதல் போன்றவற்றுக்காக சீன அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரேயொரு வர்த்தக நிறுவனமாக CGWIC காணப்படுகின்றது.

வலைப்பின்னல் சேவைகள், பல்வேறு ஒலிபரப்பு முறைமைகள், அலைவரிசை சேவைகள், இணையவழி அரசாங்க மற்றும் கற்றல் சேவைகள் போன்றன உள்ளடங்கலாக பல்வேறு தொடர்பாடல் சேவைகளை வழங்கமுடியும்.

இதனை உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பதற்கு தேவையான அங்கீகாரத்துக்காக தமது நிறுவனம் தொலைத் தொடர்பாடல் கட்டுப்பாட்டு ஆணைக் குழுவுடன் இணைந்து செயற்படுவதாகவும் அந்நிறுவனத்தின் தலைவர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார். (எ-11)


## வாழும் கலைப் பயிற்சி

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி இன் வாழும் கலைப்பயிற்சி-1 (சுதர்சனக்கிரியா, யோகாசனம், தியானம், பிரணாயாமம், மூச்சுப்பயிற்சி) இற்கான அறிமுகவுரை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கிளிநொச்சி கரடிப்போக்கு புனித திரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பயிற்சிகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜுன் மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. மேலதிக தொடர்புகளுக்கு 077 4277375,0777740593 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். (அ-9)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எல்லாம் அவன் செயலே கிளியே



காயம் அழிந்துவிடும்
காண்பனவும் ஒழிந்துவிடும்
மாயமான வாழ்வைவிட்டுக் – கிளியே!
மலரடியைப் பணிவோமே
ஆன்மா அழியாப் பொருள்
அப்பொருளை அறிந்துவிட்டால்
வீண்பாவ னையெல்லாம் – கிளியே!
வெந்துநீ றாய்விடுமே
பொறிவழியே போயலையும்
பொல்லாம னைத்தை வென்றால்
அறிவறி யாமைவிட்டுக் – கிளியே!
அரன்பதம் சேர்ந்திடலாம்

# மனிதப் பணியில் மறுமலர்ச்சி மலர்ந்திட தூய ஆவியின் செயல்களுக்கு இடம்கொடுப்போம்

உயிர்ப்புப் பெருவிழாவின் ஐம்பதாம் நாள் பெந்தகோஸ்து திருவிழாக் கொண்டாடப்படுகின்றது. தூய ஆவியின் வல்லமையால் திருச்சபை தோன்றிய நிகழ்வைத்தான் நாம் பெந்தகோஸ்து திருநாளில் நினைவுகூருகின்றோம்.

உண்மையில் எருசலேம் மாடி அறையில் மரியாவும் திருத்தூதர்களும் கூடியிருந்தபோது முதல் பெந்தகோஸ்து நடைபெற்றது. பெந்தகோஸ்து நிகழ்விலே மனிதர்களை நோக்கி ஒரு பாலத்தைக் கடவுள் தூய ஆவியாரை அனுப்புவதன்மூலம் கட்டத் தீர்மானித்தார். பெந்தகோஸ்து புதுமை என்பது மனித குலம் இழந்து விட்டிருந்த ஒருவரையொருவர் புரிந்து கொள்ளல் எனும் கொடையை மீண்டும் பெற்றுக்கொள்வதாகும்.

தூய ஆவியின் அருட்பொழிவால் நாம் அனைவரும் உறுதியுடன் வாழ்ந்து வருகின்றோம். தூயஆவி கடவு

## பரமபிதா காட்டிய பாதை

ளின் புதிய மற்றும் வல்லமைமிக்க தொடர்பாளராய் இருந்து கடவுளின் பணியில் ஒன்றிப்பை ஏற்படுத்துகிறார். உயிர்த்தெழுந்த இயேசுவைப் பறைசாற்றிட, புதிய மாற்றங்களை ஏற்படுத்திட திருத்தூதர்களுக்கு வல்லமை அளிக்கின்றார் தூய ஆவி.

தூய ஆவி ஏற்படுத்தும் மாற்றங்களுக்கு விசுவாசிகள் பயப்படத் தேவையில்லை. தூயஆவி கொடைகளை நன்கறிந்து அதன்படி வாழ்ந்தவர்கள் பெருந்துன்பத்திற்குள்ளான வேளையில் அவர்களுக்குத் தூய ஆவி ஆறுதலாகவும் ஊக்கமாகவும் வல்லமையாகவும் இருந்தார். ஆனால் இன்று எம்மில் பலர் தூய ஆவியானவரின் கொடைகளைப் பற்றி அறியாதவர்களாய் தான் வாழ்கின்றோம்.

இது தொடர்பான கதையொன்று இங்கு விபரிக்கப்படுகின்றது.

வயது முதிர்ந்து ஒரு பிச்சைக்காரர் சாகும் தறுவாயில் கடைசி மகனை அழைத்து, "மகனே நான் உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ஏதும் இல்லை. ஆனால் இந்தக் கோப்பையை ஒரு பணக்காரப் பெண்மணி வீட்டுக் குப்பையிலிருந்து எடுத்தேன் எனக்கூறிக் கொடுத்தார். தந்தை இறந்தபின் மகன் பிச்சையெடுத்து வாழ்ந்து வந்தான்.ஒரு தங்க ஆசாரி ஒருவர் அவனுடைய கோப்பையில் காசு ஒன்று போட்டபோது கேட்ட சத்தம் அவரை ஒரு நிமிடம் அந்தக் கோப்பையைச் சோதிக்கச் செய்தது.


அந்தக் கோப்பை சுத்தத் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது. இளைஞனே ஏன் உன் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறாய். நீ ஒரு பணக்காரன். நீ வைத்திருக்கும் கோப்பை பல இலட்சம் மதிப்புள்ளது'' எனக் கூறினார் அந்த தங்க ஆசாரி. இதையறியாது இன்றுவரையும் வாழ்கின்றேனே என பெருமூச்சு விட்டான் அந்த மகன்.

நாமும் அந்தப் பிச்சைக்காரத் தந்தை, மகனைப்போல நம்மிடமிருக்கும் செல்வத்தைப் பற்றித் தெரியாது வாழ்கின்றோம். நம்முள் வாழும் தூய ஆவியானவரின் கொடைகள் பற்றித் தெரியாது இருக்கிறோம். அவர்தரும் அருள்விலை மதிப்பில்லாதது. உயிர்த்த இயேசு அளிக்கும் கொடைகளான சமாதானம், பாவ மன்னிப்பு ஆகியவை ஆவியின் பிரசன்னத்தின் வெளிப்பாடுகள். பாவமன்னிப்புப் பெற்ற சமாதான வாழ்வு வாழ இவ்விழா நம்மைத் தூண்டுகின்றது.

மனித மாண்பும் சுதந்திரமும் மலர்ந்தால் தான் ஒரு சமுதாயத்தை நீதியில் உருவாக்கமுடியும். ஆழமான இறையனுபவம் பெற்ற மனிதரின் வாழ்க்கையினால் மட்டுமே மக்கள் இயேசுவிடத்திலும் தூய ஆவியினிடத்திலும் ஈர்ப்பைப் பெறுவார்கள். அப்போதுதான் மனிதப் பணியில் மறுமலர்ச்சி மலரும்.

எனவே எம்முள் உறைந்திருக்கும் தூய ஆவியின் செயலாற்றலுக்கு எம் இதயங்களை முற்றிலுமாகத் திறப்போம். சான்று பகர்வோம்.

பெந்தகோஸ்து திருவிழாவன்று நாம் தூய ஆவியாரில் நமக்கிருக்கும் விசுவாசத்தை அறிக்கையிடுகின்றோம். ஆனால் அந்த விசுவாசத்திற்கேற்ற நடைமுறை நம்மிடம் உள்ளதா? நமது விசுவாசம் சில வழிபாட்டு முறைமைகளில் அடங்கி விடுகிறதா? நம்மிடம் விசுவாசம் இருந்தால் விசுவாசத்திற்கேற்ற வாழ்வை நாம் வாழ வேண்டும்.



இன்று உறைந்துபோன கிறிஸ்தவ வாழ்வு, சாரமற்ற உப்பாகிவிட்ட வாழ்வு, அரைகுறை கிறிஸ்தவ வாழ்வு, நற்செய்தி விழுமியங்களுக்கு சான்று பகராத வாழ்வு, நற்செய்தியை அறிவிக்கத் தயங்கும் வாழ்வு, உலகியல் மனப்பாங்கில் உழலும் வாழ்வு, துரிதகதியில் எதிலும் செயலாற்றி இறையுண்மை

**ம. பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

களை மறந்துவிடும் வாழ்வு ஆகியவையே நம்மிடம் உள்ளன.

எனவே குறைகூறும், பொறாமைப்படும், பிறர் பெயரைக்கெடுக்கும் செயல்கள், சுயநலச் செயல்களை விட்டுவிடுவோம். எனவே நாம் அமைதி, சாந்தம், அன்புச் செயல்களுக்கு ஏற்ப வாழ தூய ஆவியானவரிடம் வேண்டுவோம். நாம் தூய ஆவியின் அருள்பெற்று மக்கள் பணியில் மறுமலர்ச்சி மலர வாழ்வோம்.

## சுனாமியின் போது தப்பியோடிய கைதி 7 வருடங்களின் பின் கைது

சிறைச்சாலையில் இருந்து 2004 ஆம் ஆண்டு சுனாமி அழிவு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் தப்பியோடிய கைதி ஒருவர் ஏழு வருடங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கைதி வெலிக்கடை பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தப்பியோடிய நிலையில் கைது செய்யப்பட்டவர் 26 வயதான இளைஞர் என தெரிவிக்கப்படுகின்றது.

இவர் மாத்தறை நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார். (அ-7)

## விடைத்தாள்கள் மீள்பரிசீலனை நடவடிக்கை நிறைவடைந்துள்ளது

### பரீட்சைகள் திணைக்களம் தகவல்

விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான சூழ்நிலை தற்சமயம் இல்லை என பரீட்சைகள் ஆணையாளர் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இசற் பிரச்சினை குறித்த வழக்கில் உயர் நீதிமன்றம் இதுவரை தீர்ப்பு வழங்காத நிலையில் பரீட்சை பெறுபேறுகள் வெளியிட முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நிறைவடையும் வரை மீள் திருத்த பெறுபேறுகளை வெளியிட முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை மீள்திருத்தத்திற்காக ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மாணவர்கள் விண்ணப்பித்திருந்ததாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ-2)


## பகுப்பாய்வுகளை சமர்ப்பிக்கவும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய தரம் 5 இற்கான புலமைப்பரிசிலின் 9 ஆவது வலய மட்ட பரீட்சை புள்ளிகள் பகுப்பாய்வு நாளை திங்கட்கிழமை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்ப பிரிவில் சமர்ப்பிக்க வேண்டும் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

இப்பகுப்பாய்வு புள்ளி அடிப்படையில் முதல் 150 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விசேட கருத்தமர்வு நடத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-29)

## பூமிக்கும் சூரியனுக்கும் இடையே வெள்ளிக்கிரகம்



பூமி மற்றும் சூரியனுக்கிடையே எதிர்வரும் ஜூன் 5ஆம் திகதி வெள்ளிக்கிரகம் கடக்கிறது. வெள்ளிக்கிரகம் குறித்து விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

சமீபத்தில் நடந்த ஆய்வில் இக்கிரகம் பூமி மற்றும் சூரியனைக்கடக்க நெருங்கிவருவது தெரிந்தது. எனவே இது குறித்து தீவிரமாக ஆய்வு நடத்தியதில் எதிர்வரும் ஜூன் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் இது பூமி மற்றும் சூரியனைக்கடக்கும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. வெள்ளிக்கிரகம் கடந்து செல்வதை மேற்கு பசுபிக், கிழக்காசியா, மேற்கு அவுஸ்திரேலியா மற்றும் வடதுருவத்தில் உள்ள நாடுகளில் முழுமையாகக் காணமுடியும். அமெரிக்காவைப் பொறுத்தவரை ஜூன் 5ஆம் திகதி மாலையில் இக்கிரகம் கடக்கும். ஐரோப்பிய நாடுகளில் 6 ஆம் திகதி காலை வெள்ளிக்கிரகம் கடப்பதைப் பார்க்கமுடியும். இதற்கு முன்பு கடந்த 2004 ஆம் ஆண்டு இது போன்ற பெயர்ச்சி நடக்கின்றது. அடுத்தது இச்சம்பவம் 2117 ஆம் ஆண்டு நடைபெறும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (அ-7)



மிரிகம சாசன பிரிவேனாவில் ராமான்னிய பீட மகாநாயக்க தேரர் அதிவண வெ.வெல்தெனிய மெதலங்கார தேரரை முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்றைய தினம் சந்தித்தார். அங்கு இடம்பெற்ற பூஜை வழி பாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, ஜயந்த கெட்டகொட, பாலிதரங்கே பண்டார ஆகியோரும் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

## தெரிவுக் குழுவில் கூட்டமைப்பு பங்கு கொள்ளும்-ஹக்கீம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகள் சுமுகமான முறையில் இடம்பெற்று வருவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்டீன் றொபிச்சனிற்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்குமிடையிலான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து கொள்ளும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

## கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது

அளுத்கம பிரதேசத்தில் 516 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் கொள்ளைச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவம் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து 100 இலட்சம் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் மாணிக்கக்கற்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை கொள்ளைச் சம்பவங்களுக்கு பயன்படுத்துவதற்காக வைத்திருந்த ரி 56 ரக துப்பாக்கி ரவைகள் 9 மற்றும் 9 மில்லி மீற்றர் துப்பாக்கி ரவைகள் சிலவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-7)

## ஜயவர்த்தனபுர பல்கலை ஆய்வுகூடத்தில் தீ விபத்து

(கொழும்பு)

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக விஞ்ஞான ஆய்வு கூடத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இத்தீ விபத்து நேற்று காலைவேளையில் ஏற்பட்டுள்ளது.

தீ பரவல் ஏற்பட்டதை தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் இருந்த தீயணைப்பு கருவியை தேடியதற்கு அதிக நேரம் சென்றமையின் காரணமாக தீ அதிக இடங்களிற்கு பரவியதாக தீயணைப்பு படையினர் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக விஞ்ஞான ஆய்வு கூடத்தில் இருந்த இரசாயன கொள்கலன் ஒன்றினுள் நீர் புகுந்தமையின் காரணமாக ஏற்பட்ட வெடிப்பினால் இந்தத் தீப்பரவல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## வடமாகாண தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வடமாகாண தமிழ் மொழித்தின போட்டிகள் நேற்று சனிக்கிழமையும் இன்று ஞாயிற்றுக்கிழமையும் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறுகின்றது.

இதில் நேற்று நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

ஆக்கத்திறன் வெளிப்பாடு

*பிரிவு-1*

இ. துகிதன் (கிளி/ சிவபாத கலையகம்), க. அபிநயா (யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம்), வ. லக்ஷிதா (மன்/பரிகாரி கண்டல்)

வாசிப்பு

*பிரிவு-1*

லி. தீபிகா (யா/ மகாஜனாக்கல்லூரி, ஐ. செனிக்கா சனோலின் (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), த. தரணிகா (மு/ வற்றாப்பளை மகா வித்தியாலயம்)

வாசிப்பு

*பிரிவு-2*

பே. மயூரி (வவு/ இறம்பைக்குளம் மகளிர் ம.வித்தி, சூ.தர்சா (கிளி/இந்துக் கல்லூரி), வா. ஜெயமிதிலா (யா/ வட இந்து மகளிர் கல்லூரி)

பாவோதல்

*பிரிவு-1*

சி.சிவாம்சன் (யா/ இந்து ஆரம்பப்பாடசாலை), அ.நிலாமதி (மன்/ மூன்றாம்பிட்டி அ.த.க. பாடசாலை), கு.சிந்தூரி (வவு/ தமிழ் மத்திய ம.வித்தி)

*பிரிவு-2*

ர.ஆர்த்திகா (யா/ வடமத்திய மகளிர் கல்லூரி), இ.ஸாண்டிகா (மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), பி தமிழ்விழி (கிளி/ சிவநகர் அ.த.க. பாடசாலை)

*பிரிவு-3*

சி.யதுசா (கிளி/ சோரன்பற்று கணேசா வித்தியாலயம்), தெ. மிதிலைமாறன் (வவு/ புதுக்குளம் ம.வி), க.திவ்யா (யா/புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி)

*பிரிவு-4*

க. அமிர்தவர்சினி (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி),ப. கீர்த்திகா (மன்/ சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), பு. சாமினி (வவு/ கிடாச்சூரி அ.த.க.பாடசாலை)

*பிரிவு-5*

வி. துவாரகா (யா/ யூனியன் கல்லூரி), ம.நிலானி (மு/ கற்சிலைமடு அ.த.க. பாடசாலை), இ. சுகிர்தா (வவு/ பூவரசங்குளம் ம.வி),

இசையும் அசைவும்

*பிரிவு-1*

செ. சயந்தினி (மன்/ தட்சணா மருதமடு அ.த.க. பாடசாலை), தி. சுஜானி (வவு/ இறம்பைக்குளம் மகளிர் ம.வித்தி),சு. சோமினி (யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

பேச்சு

*பிரிவு-1*

உ.சுபிதன் (யா/ சென்ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்), சு.நிவேதா (மு/ மங்குளம் ம.வி), க.லதாங்கி (கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை)

*பிரிவு-2*

சி.கதீசனா (மு/ வற்றாப்பளை ம.வி), ச. துசிதா (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), லி. அன்ரனற் அனுசியா (மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி)

*பிரிவு-3*

ர.கோபிகா (யா/ கனகரட்னம் மத்திய ம.வித்தி), த. ரவிக்காந் (மன்/ இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலை), ப.டயந்தா (மு/ மாங்குளம் ம.வி)

*பிரிவு-4*

இ. யளறஞ்சினி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), ம.றெபோஜினா (மன்/புனித ஆனாள் மத்திய ம.வி), க. பவித்திரா (கிளி/ ம.வி)

*பிரிவு-5*

த.மதுஜனன் (யா/ இணுவில் மத்திய கல்லூரி), வி.விஜிதா (வவு/ இறம்பைக்குளம் மகளிர் ம.வித்தி), இ.மேரிஜெனிற்றா குரூஸ் (மன்/புனித வளனார் றோ.த.க. பாடசாலை),

இசை தனி

*பிரிவு-1*

இ.லதாங்கி (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), செ. கஸ்மிதா (வவு/ தரணிக்குளம் கணேஷ் வித்தியாலயம்), தி. சுகிராஜ் (கிளி/ கிளிநொச்சி ம.வி) (தொடரும்) (அ-266)

# ஐ.பி.எல். இறுதி இன்று

# சென்னையா? கொல்கத்தாவா?



5-வது ஐ.பி.எல் இருபது-20 கிரிக்கெட் போட்டி கடந்த ஏப்ரல் மாதம் 4-ம் திகதி தொடங்கியது. இதில் 9 அணிகள் பங்கேற்றன. ஒவ்வொரு அணியும்,மற்ற அணிகளுடன் தலா 2 முறை லீக் சுற்றில் மோதின. கடந்த 20-ம் திகதியுடன் லீக் ஆட்டங்கள் முடிபடைந்தன.

புள்ளிகள் அடிப்படையில் டில்லி டேர்டேவில்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், மும்பை இந்தியன்ஸ், நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் ஆகிய அணிகள் முறையே முதல் 4 இடங்களை பிடித்து பிளேஒப் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ், கிங்ஸ் லெவின் பஞ்சாப், ராஜஸ்தான் றோயல்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ், புனே வாரியர்ஸ் ஆகிய அணிகள் முறையே 5 முதல் 9 வரையான இடங்களை பிடித்து போட்டியில் இருந்து வெளியேறின.

பிளேஒப் சுற்று கடந்த 22- ம் திகதி தொடங்கியது. குவாலிபயர்-1க்கான போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 18 ஓட்டங்களால் டில்லி அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

எலிமினேசன் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் 38 ஓட்டங்களால் மும்பை இந்தியன்ஸை தோற்கடித்து குவாலிபயர்-2 போட்டிக்கு தகுதி பெற்றது. மும்பை அணி வெளியேறியது.

சென்னையில் நேற்று முன்தினம் நடந்த குவாலிபயர்-2 போட்டியில் சென்னை அணி 86 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இதில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ்- காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன.

இதில் கொல்கத்தாவை வீழ்த்தி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஹட்ரிக் சாதனை படைக்குமா? என்று சென்னை அணியின் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

சென்னை அணி 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டில் ஐ.பி.எல் கோப்பையை ஏற்கெனவே கைப்பற்றியுள்ளது. தொடர்ந்து 3-வது முறையாக ஐ.பி.எல் கிண்ணத்தை வெல்ல சென்னை சுப்பர் கிங்சுக்கு நல்ல வாய்ப்பு உள்ளது.

கடந்த ஆண்டு சேப்பாக்கத்தில் நடந்த இறுதிப் போட்டியில் சென்னை அணி பெங்களூர் அணியை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது. அதே மாதிரி தற்போதும் சேப்பாக்கத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில் கிண்ணத்தை வென்று சுப்பர் கிங்ஸ் சரித்திரம் படைக்குமா? என்று ரசிககர்கள் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளனர்.

கடந்த 2 ஆட்டங்களில் சென்னை அணியின் துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. இதே அதிரடியான ஆட்டம் இன்றும் தொடர்ந்தால் கிண்ணம் சென்னைக்கு தான்.

இந்தப் போட்டி தொடரிலேயே மிகவும் மோசமாக ஆடிவந்த சென்னை வீரர் முரளி விஜய் மிகவும் முக்கியமான நேற்று முன்தின ஆட்டத்தில் முத்திரை பதித்தார். அவரது அதிரடியான ஆட்டம் சென்னையின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தது.

கடந்த ஆண்டு இறுதிப் போட்டியில் முரளி விஜய் 52 பந்தில் 95 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் அதே அதிரடியான ஆட்டத்தை இன்றைய இறுதிப் போட்டியிலும் வெளிப்படுத்துவரா? என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

இதேபோல் பிராவோ, அணித்தலைவர் தோனி ஆகியோரும் தொடர்ந்து அதிரடியாக ஆடுவது சென்னை அணிக்கு பலமே.

ரெய்னா, அல்பி மோர்க்கல், மைக் ஹசி, பத்திரிநாத் போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களும் சென்னை அணியில் உள்ளனர்.

பந்துவீச்சில் ஹில்பெனாஸ், அஸ்வின் ஆகியோர் முத்திரை பதிக்கக் கூடியவர்க்ள்.

சென்னை அணி 4-வது முறையாக இறுதிப் போட்டிக்கு நுழைந்துள்ளது. 2008-ம் ஆண்டு ராஜஸ்தானிடம் தோற்று கிண்ணத்தை இழந்தது.

கொல்கத்தா அணி முதல் முறையாக இறுதிப் போட்டிக்கு வந்துள்ளது. முதல் முறை யாக கிண்ணத்தை வெல்லும் ஆர்வத்தில் அந்த அணி உள்ளது. துடுப்பாட்டம்,பந்து வீச்சில் அவ் அணி சமபலம் பெற்று காணப்படுகிறது.

அணித்தலைவர் காம்பீர், கலிஸ், மக்குலம், யூசுப் பதான், மனோஜ் திவாரி ஆகியோர் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர். மேற்கிந்திய தீவுகள் சுழற்பந்துவீச்சாளர் சுனில் நரேன் அந்த அணியின் தூணாக உள்ளார். அவர் 24 விக்கெட் கைப்பற்றியுள்ளார். இது தவிர பிரட்லீ, சகீப் அல் ஹசன், எல்.பாலாஜி, ரஜத் பாட்டியா போன்ற சிறந்த பந்து வீச்சாளர்களும் அந்த அணியில் உள்ளனர்.

இரு அணிகளும் லீக் ஆட்டத்தில் 2 முறை மோதியதில் சென்னையில் கொல்கத்தா



அணியும், கொல்கத்தாவில் சென்னை அணியும் வெற்றி பெற்றது.

இரு அணி களும் சமபலம் வாய்ந்தவை என்பதால் இன்றைய இறுதிப் போட்டி விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# சேவாக் செய்த தவறால் வாய்ப்பை இழந்த டில்லி

ஐ.பி.எல். தொடரின் ஆரம்ப லீக் ஆட்டம் முதல் அதிரடியாக விளையர்டிய டில்லி டேர்டேவில்ஸ் அணி தொடர்ந்து புள்ளிப் பட்டியலில் முதலிடத்தில் இருந்தது. இதனால் முதல் தகுதிநீக்கச் சுற்றில் கொல்கத்தா அணியிடம் தோல்வியடைந்த போதும், இறுதிச் சுற்றுக்கு செல்ல இரண்டாவது தகுதிச் சுற்று மூலம் மற்றொரு வாய்ப்பு டில்லி அணிக்குக் கிடைத்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 2-வது தகுதிச் சுற்றுப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிராக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி டேர்டேவில்ஸ் அணியின் தலைவர் வீரேந்திர சேவாக்,பந்து வீச்சாளர் மோர்னி மோர்க்கல் இந்த போட்டியில் விளையாட மாட்டார் என்று அறிவித்தார்.

இது பலருக்கும் அதிர்ச்சியாக இருந்தது. ஏனென்றால் மோர்கல் இத் தொடரில் மொத்தம் 25 விக்கெட்டுக்களை எடுத்து கத்தரிப்பூ தொப்பியை கைப்பற்றியவர்.

நடப்பு தொடரில் நல்ல பந்து வீச்சாளர்களில் ஒருவர். அவரை வேண்டாமென சேவாக் சட்டென முடிபெடுத்திருந்தாலும் அதன் பலனை நன்றாகவே அனுபவித்துவிட்டார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான நேற்றுமுன்தின போட்டி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மோர்கலை கைவிட்டது மட்டுமல்லாமல் களத்தடுப்பை தெரிவு செய்ததும்கூட தவறான முடிபு என்றே விமர்சிக்கப் படுகிறது.

இதே தவறைத் தான் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிராக மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ஹர்பஜன் சிங்கும் செய்திருந்தார் என்கின்றனர்.

இதுபோன்ற முக்கிய போட்டிகளில் முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்து ஓட்டங்களை குவித்துவிட்டு எதிரணியை பதிலெடுத்தாட விட்டால்தான் சரியாக இருக்கும். ஆனால் இரண்டு போட்டிகளிலும் சென்னை சுப்பர் கிங்ஸை துடுப்பாடவிட்டதால் சென்னை அணி தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டது.

டில்லி அணியைப் பொறுத்தவரை சேவாக், வோர்னர் இருவரும் தான் நம்பிக்கைக்குரிய துடுப்பாட்ட வீரர்கள்.

இருவருமே சொற்ப ஓட்டங்களில் சொதப்பி விட்டுபோனதால் துடுப்பாட்டத்திலும் வீழ்ந்து படுதோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.

# மே.தீவுகள் முதல் இன்னிங்ஸ் 370

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

இதில் முதல் இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 370 ஓட்டங்களை எடுத்துள்ளது.

ட்ரென்ட் பிரிட்ஜ்ஜில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல்நாள் ஆட்ட முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக வழமையை போன்று முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் இந்த இனிங்ஸிலும் ஓட்டங்களைப் பெற்றத் தவறியிருந்தனர்.

முதலாவது விக்கெட் 6 ஓட்டங்களுக்கும் இரண்டாவது விக்கெட் 26 ஓட்டங்களுக்கும் 3-வது விக்கெட் 42 ஓட்டங்களுக்கும் 4-வது விக்கெட் 63 ஓட்டங்களுக்கும் வீழ்ந்தது.

ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைசேர்ந்த ஷிவ்நரேன் சந்தர்போல்,மார்லன் சாமுவேல்ஸ் இருவரும் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்த்தினர்.

எனினும் அணி 125 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஷிவ்நரேன் சந்தர்போல் ஆட்டமிழந்ததும் களமிறங்கிய விக்கெட் காப்பாளர் டினேஷ் ராம்டீன் ஓட்டங்களை பெறத் தவற அவ்வணி 6 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது.



எனினும் அதன் பின்னர் இணைசேர்ந்த மார்லன் சாமுவேல்ஸ்- டெரன் சமி இருவரும் மிகச் சிறப்பாக ஆடி மேற்கிந்தியத் தீவுகள் அணியைக் காப்பாற்றினர். டெரன் சமி அதிரடியாக ஆட மார்லன் சாமுவேல்ஸ் பொறுப்பாகவும் நிதானமாகவும் ஆடினார்.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக தனது மூன்றாவது டெஸ்ட் சதத்தைப் பெற்ற மார்லன் சாமுவேல்ஸ் 117 ஓட்டங்களையும், அணித் தலைவர் டெரன் சமி 106 ஓட்டங்களையும், ஷிவ்நரேன் சந்தர்போல் 46 ஓட்டங்களையும், கெரான் பவல் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

இங்கிலாந்து அணி சார்பாக ரிம் பிரேஸ்னன் 4 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்ருவேர்ட் பிரோட், கிரேம் சுவான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மேற்கிந்தியத் தீவுகள் முதல் இன்னிங்ஸ் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 370 ஓட்டங்களை பெற்றது.

3 போட்டிகள் கொண்ட இத் தொடரில் முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக் கில் முன்னிலையிலுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பீற்றர்சனுக்கு அபராதமா? ஆச்சரியமளிக்கிறது-பிளின்டொப்

இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்த கருத்திற்காக அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டிருப்பது ஆச்சரியத்தைத் தருவதாக இங்கிலாநந்து அணியின் சகலதுறை வீரர் அன்ரூ பிளின்டொப் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து- மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு எதிராக இடம்பெற்ற முதலாவது போட்டியில் நேர்முக வர்ணனையாளரான நிக் நைட் மீது விமர்சனங்களை முன்வைத்தமைக்காகவே கெவின் பீற்றர்சனுக்கு அபராதம் விதிக்கப்பட்டிருந்தது.

நிக் நைட் எவ்வாறு நேர்முக வர்ணனைக்குள் புகுந்தார் என்றவாறு தெரிவித்த கெவின் பீற்றர்சன், அதைக் கேலிக்குரியது எனவும் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து விரைந்து செயற்பட்ட இங்கிலாந்து கிரிக்கெட் சபை, கெவின் பீற்றர்சனிடம் விசாரணை நடத்தியதுடன், அவருக்கு வெளியிடப்படாத தொகை அபராதத்தையும் விதித்துத் தீர்ப்பளித்தது.

எனினும் இந்த நடவடிக்கை ஆச்சரியம் அளிப்பதாக தெரிவிக்கும் பிளின்டொப், மற்றவர்களை விமர்சிக்கும் பணிக்காக ஊதியம் பெறும் ஒருவரை (நிக் நைட்- நேர்முக வர்ணனை) விமர்சித்தமைக்காக கெவின் பீற்றர்சனுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதை அதிசயமானது எனத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தான் விளையாடும் காலத்தில் தான் டுவிட்டரில் இருந்ததில்லை எனவும், அவ்வாறு இருந்திருந்தால் ஒவ்வொரு நாளும் தனக்கு அபராதம் விதிக்கப்பட்டிருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கணவன் தாக்கியதில் மனைவி உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் பட்டப்பகலில் ஐந்து பிள்ளைகளின் தாயொருவர் நேற்றைய தினம் கணவனால் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த யோ.பிறேமினி (வயது-37) என்ற பெண்ணே படுகொலை செய்யப்பட்டவராவார்.

இவர் வீட்டில் நாளாந்த கடமைகளை செய்து கொண்டிருந்த போது பின் பகுதியில் பொல்லுடன் வந்த கணவன் தலையிலும் முதுகுப் பகுதியிலும் கோரமாகத் தாக்கியுள்ளார்.

மிகவும் படுகாயமடைந்த இவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத் தாக்குதலில் ஈடுபட்ட கணவன் ஒரு மனநோயாளி என அப்பகுதியிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# வாகனம் மோதி குடும்பஸ்தர் பலி

கனரக வாகனம் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

இச்சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியளவில் பரந்தன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உரியான் முரசுமோட்டையைச் சேர்ந்த பேனாட் கீதபொன்கலன் (வயது 59) என்ற குடும்பஸ்தரே சம்பவத்தில் பலியானவராவார்.

இவர் வீதியால் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த சமயம், வீதி திருத்தத்தில் ஈடுபட்ட கனரக வாகனம் பின்பக்கமாக மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதன்போது சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார். (எ-11)

# வல்லையில் விபத்து...

மேற்கு வீரபாகம் தோட்டத்தைச் சேர்ந்த தனியார் பஸ் நடத்துனரான தனபாலசிங்கம் பத்மசங்கர் (வயது 24) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

விபத்து இடம்பெற்ற பல நிமிடங்களுக்குப் பின்னரே அவரது சடலத்தை மக்கள் கண்டதாகவும், எனினும் அதனை மீட்க எவரும் முன்வரவில்லை எனவும் கூறப்பட்டது.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரே உடனடியாக அதனை மீட்டு மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இவ் இளைஞனின் மோட்டார் சைக்கிள் எவ்வாறு விபத்துக்குள்ளானது, இது விபத்தால் இடம்பெற்ற உயிரிழப்பா? அல்லது கொலையா? என்ற கோணத்தில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-11,24)

# தமிழரசுக் கட்சித்...

உப தலைவர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, பேராசிரியர் சிற்றம்பலம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன், பிரதிச் செயலாளர் நாயகமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைராசசிங்கம், தொழிற்சங்க செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன், கலாசாரச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன், சட்டம் மற்றும் வெளிவிவகாரங்களுக்கான செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோரும் தெரிவாகினர். இவர்களுடன் 8 மாவட்டங்களுக்குமான உப தலைவர்களும், 12 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் நடைபெறவுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு கறுப்புக் கொடிகள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலம் சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, சிவஞானம் சிறிதரன், சரவணபவன், பா.அரியநேத்திரன், சுமந்திரன், சீ.யோகேஸ்வரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கனகசபை, திருகோணமலை துரைரட்ணசிங்கம், துரைராஜசிங்கம், ஜனாப் கே.எம்.இமாம், கொழும்புக் கிளைத் தலைவர் சட்டத்தரணி கே.வி.தவராசா, செயலாளர் சு.வித்தியாதரன் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தேசிய மாநாட்டுத் தீர்மானங்கள் தொடர்பிலும் இறுதித் தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளன. (எ-11)

# நீதிக்குப் புறம்பான படு...

வெளியிட்டிருந்த 2011ஆம் ஆண்டுக்கான உலக மனிதவுரிமை நிலைமைகள் குறித்த அறிக்கையில் படைத்தரப்பினர் மற்றும் அவர்களின் ஆதரவுடன் இயங்கும் துணை ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்படும். நீதிக்குப் புறம்பான படுகொலைகள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந் நிலையில் இலங்கையில் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் எதுவும் இடம்பெறவில்லை எனக் குறிப்பிட்டுள்ள படைத்தரப்பின் குரல்தரவல்ல அதிகாரி பிரிகேடியர் ருவான் வனிகசூரிய, அமெரிக்காவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது போன்று இலங்கையில் துணை ஆயுதக் குழுக்களும் செயற்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமெரிக்காவால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை எவராவது நிரூபிக்க முடியமானால், அது குறித்து அவர்கள் எந்தவேளையிலும் எமது கவனத்துக்கு கொண்டுவர முடியும். இந்த முறைப்பாடுகள் தொடர்பில் நாம் விசாரணைகளை மேற்கொண்டு தேவைப்படும் பட்சத்தில் நடவடிக்கைகளை எடுப்போம்.

கனேடிய குடியுரிமை பெற்ற ஒருவர் அண்மையில் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் படையினர் மீது சிலர் குற்றம் சுமத்தியிருந்தனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களில் ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளி. இலங்கையில் என்ன நடக்கின்றது என்பதற்கு இது சிறந்ததொரு எடுத்துக்காட்டு என பிரிகேடியர் ரூவான் வனிக சூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற நீதிக்குப் புறம்பான படுகொலைகள் மற்றும் காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழு மற்றும் சர்வதேச மனிதவுரிமை அமைப்புகளும் இலங்கை அரசாங்கம் மீது குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தொடர்புபட்ட செய்தி உள்ளே...) (எ-11)

# நவநீதம் பிள்ளையின்...

வாஷிங்டனுக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான அரச தரப்புக் குழுவினருடனான சந்திப்பின்போதே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில், ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பீரிஸ் தலைமையிலான குழுவினர் பதிலளித்துள்ளனர்.

ஆனால் நவநீதம் பிள்ளை தனது விஜயத்துக்கு முன்னதாக உண்மைகளைக் கண்டறியும் அதிகாரிகள் குழு ஒன்றை இலங்கைக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளதாக பீரிஸ் தலைமையிலான குழுவினர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் கூறியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மட்டுமே இலங்கைக்கு விஜயம் செய்ய முடியும் என அரசாங்கம் கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி அறிவித்திருந்தது.

நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்ய முன்னர் அனுமதி மறுத்திருந்த அரசாங்கம், ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஏற்பட்ட சர்வதேச அழுத்தங்களை அடுத்து இந்த அனுமதியை வழங்கியிருந்தமை தெரிந்ததே.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தில் அரசாங்கம் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளருடன் நெருக்கமாகச் செயற்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஐ.நா. மனித்வுரிமைகள் ஆணையாளராக நவநீதம்பிள்ளை மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 2010ஆம் ஆண்டு மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம் இவ்வாண்டு இறுதியுடன் நிறைவடையவுள்ளது.

இதனையடுத்து மீண்டும் அவரையே ஆணையாளராக நியமிப்பதற்கான அனுமதியை வழங்குமாறு செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஐக்கிய நாடுகள் சபையிடம் கோரியிருந்தார்.

இதனையடுத்து. ஐ.நா. பொதுச் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்படாமலேயே நவநீதம்பிள்ளை ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டமை தெரிந்ததே. (எ-11)

# இலங்கை குறித்து...

ஆகிய நாடுகளே நியமிக்கப்பட்டுள்ளன.

குறித்த மூன்று நாடுகளும் அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான அமெரிக்க அறிக்கைக்கு ஆதரவளித்து வாக்களித்திருந்தன.

இதனிடையே, மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம் மேலும் 2 வருடங்களால் நீடிக்கப்பட்டுள்ளது.

அவர் இஸ்ரேலைவிமர்சித்ததால் அமெரிக்காவினால் வெளியிடப்பட்ட எதிர்ப்பையும் கவனத்தில் கொள்ளாது அவரது பதவிகாலம் நீடிக்கப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-11)


## தேவை

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைக்கும் கம்பனிக்கு கூலியாட்கள் தேவைப்படுகின்றனர். விரும்புவோர் உடனடியாக நேரில் சமுகமளிக்கவும்.

வி.வி. கருணாரத்ன & கம்பனி
12A, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு இல.: 071 1712003

(8519)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

NP XB xxxx எனும் தொடரிலக்கத்தினையுடைய பல்சர் 150 (கறுப்பு) உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- கிருஷ்னா
077 6660232

(8520)

## வங்கியியல் கற்கைகள்

பிரத்தியேக வகுப்புகள் - பிரிவு

**CBF**
Managing Information
**DBF**
Managing Information in Financial Services

- September 2012 பரீட்சைக்குரிய துரித மீட்டல் ஆரம்பமாகவுள்ளன.
- 100% சித்தி உத்தரவாதம்.
- வசதிக்கேற்ப நேர அட்டவணை.
- ஆங்கிலம், தமிழ் மொழி விரிவுரைகள் நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்
இல. 7, பலாலி வீதி, (அப்பலோ வைத்தியசாலை அருகில்)
யாழ்ப்பாணம். TP: 021 5670345

(8521)








இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.